



முதலமைச்சர் தனது அறிக்கையில் தமிழகத்தின் வளர்ச்சிக்கு தி.மு.க.வுடன் இணைந்து செயல்படவே விரும்புவதாக தெரிவித்துள்ளார். ஆளும் கட்சியின் தவறுகளை சுட்டிக் காட்டுவதற்கு அசுரபலத்தில் தி.மு.க.கூட்டணி சட்டப் பேரவைக்கு வந்துள்ளதை நாம் பார்க்க வேண்டும். இனி தமிழகத்தில் முதன்முறையாக இரு கட்சிகளும் சேர்ந்து பயணிக்கும் என்பது ஆரோக்கியமான அரசியலில் முன் உதாரணமாகும்.

தேர்தல் முடிவுகள் அரசியலை கலக்கியதைப் போலவே மற்றொரு முடிவு களும் தமிழகத்தை கலக்கியிருக்கிறது. அதுதான் 10-ம் வகுப்பு 12-ம் வகுப்பு தேர்வு முடிவுகள் இப்போதெல்லாம் எங்கு பார்த்தாலும் கவலை தோய்ந்த முகத்துடன் பெற்றோர்கள் தனது பிள்ளைகளுக்கு எங்கே இடம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் வலம் வருகிறார்கள். அதிக மதிப்பெண் எடுத்தால் அதற்கேற்ற இடம் கிடைக்க வேண்டும், குறைந்த மதிப் பெண்களை பெறும் மாணவர்களை எங்கே சேர்ப்பது என்ற கவலை!

இந்த சூழலில் மருத்துவப் படிப்புக்கு நுழைவுத்தேர்வு ஓராண்டு காலத்துக்கு ஒத்தி வைக்கப் பட்டுள்ளதை நாம் எண்ணிப் பார்க்க வணேடும். அது முழுமையாக ரத்து செய்யப்படவேண்டும் என்று முதலமைச்சர் மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளார்கள். எனில் மாணவர்களின் எதிர்காலமும் ஆரோக்கியமாக அமையட்டும்!

- எம்.எஸ்.மூர்த்தி

Owned and published by **M.SUNDARAMOORTHY** from No. 602 Suruthi Block, Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai - 600 094. and printed by him at **SRI PADMALAYA PRINTERS**. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai - 600 021. Editor : **M.SUNDARAMOORTHY**




**மித்ரா டைம்ஸ்**
மாத இதழ்

ஆண்டு-2 ஜூன் -2016 இதழ் -1

*வெளியீட்டாளர்-ஆசிரியர்*
**M.சுந்தரமூர்த்தி**

*இணையாசிரியர்*
**K.பாலகிருஷ்ணன்**

*தலைமை துணையாசிரியர்கள்*
**G.ராம்மோகன்**
**S.சுஜாதா மூர்த்தி**

*துணையாசிரியர்*
**M.G.சேகர்**

*உதவி ஆசிரியர்கள்*
**V.மோகன்ராஜ்**
**கோவை.K.விஜயராஜ்**

*தலைமை நிருபர்கள்*
**R.குணசேகர்**
*மதுரை* **S.செல்லப்பாண்டியன்**

*நிருபர்கள்*
*பொள்ளாச்சி* **M.சாகுல் ஹமீது**
*திண்டுக்கல்* **முபாரக்**
*சேலம்* **பிரவீன்குமார்**
*திருப்பூர்* **R.அருண்**
*சென்னை* **R.பாண்டியன்**
*கோவில்பட்டி* **S.சுரேஷ்குமார்**

*வடிவமைப்பு*
**V.ராஜராஜேஸ்வரி**

*சட்ட ஆலோசகர்*
**V.N.பிரசாத்** M.A.,B.L.,

*அலுவலக முகவரி*
*# 602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு, சென்னை -94.*
*போன் : 044-23744661, 23743007*
e-mail:mitratimes2015@gmail.com



இந்த இதழில் வெளியாகும் செய்திகள் அனைத்திற்கும் இணையாசிரியரே

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது


# என் எண்ணம்...

## ஆரோக்கியமான அரசியல் தொடரட்டும்



ஆசிரியர்
எம்.எஸ்.மூர்த்தி

2016 சட்டமன்றத்தேர்ங்தல் முடிவடைந்து 232 தொகுதிகளுக்கான முடிவுகள் அறிவிக ்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் 231 பேர் பதவி ஏற்றுக் கொண்டுவிட்டனர். திருப்பரங்குன்றம் தொகுதி எம்.எல்.ஏ. மரண மடைந்து விட்டதால், அந்த தொகுதிக்கும் தஞ்சை, அரவக்குறிச்சி ஆகிய தொகுதி களுக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. 231 தொகுதிகளில் அதிமுக 133 (கூட்டணியில் கருணாஸ், தனியரசு தமிமுன் அன்சாரி (3 பேர்) வெற்றி பெற்றுள்ளதும் சேர்த்து தி.மு.க. 89 காங்கிரஸ் 8 இ.யூ.மு.லீக் 1 ஆக தி.மு.க. கூட்டணி 98 பேர் பதவி ஏற்றுள்ளனர்.

### முதலமைச்சர் ஜெ. தலைமையில் புதிய அமைச்சரவை

பதவி ஏற்பு விழாவிற்கு தி.மு.க. சார்பில் அதன் பொருளாளர் மு.க.ஸ்டாலின் மற்றும் 14 எம்.எல்.ஏக்கள் பங்கேற்றனர். “அந்த விழாவில் கூட்டத்தோடு கூட்டமாக நிறுத்தி தி.மு.க.வை அவமானப்படுத்திவிட்டார்கள்.” என்று கருணாநிதி காட்டமாக அறிக்கை கொடுக்க முதலமைச்சர் ஜெயலலிதா, “ஸ்டாலின் பங்கேற்பார் என்பது எனக்கு தெரியாது. தெரிந்திருந்தால், அவருக்கு உரிய மரியாதையை தரச்சொல்லியிருப்பேன்” என்றார்.

எம்.எல்.ஏக்கள் பதவியேற்பில் ஸ்டாலின் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு வணக்கம் தெரிவித்ததை பத்திரிகையில் போட்டிருந்தார்கள். ஸ்டாலின் மகன் உதயநிதி தனது டுவிட்டர் பக்கத்தில் ஜெயலலிதாவின் அறிக்கையை போட்டு Respect என்று போட்டு ஒரு கைதட்டல் கும்பிடு படம் போட்டுள்ளார்.



# சாதனை முதல்வர்

# ஜெவுக்கு ஜெ....

தமிழ்நாடு முழுவதும் மட்டுமல்ல, அகில இந்தியாவே உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்த 15வது சட்டசபைக்கான தேர்தல் முடிவுகள் வெளிவந்துவிட்டன. விதவிதமான தேர்தல் கணிப்புகளுக்கு சரியான பதில் கிடைத்துவிட்டது. மொத்தம் உள்ள 234 தொகுதிகளிலும் தேர்தல் அறிவிக்கப் பட்டிருந்தாலும், பணப்பட்டுவாடா புகாரைத் தொடர்ந்து, அரவக் குறிச்சியிலும், தஞ்சாவூரிலும் 23ந் தேதிக்கு தேர்தல் ஒத்திவைக்கப் பட்டுள்ளது. அந்த 2 தொகுதி தேர்தல் முடிவுகளும் வெளிவந்து எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை என்ற வகையில், இந்த 232 தொகுதி தேர்தல் முடிவுகளும் ஜெயலலிதா தலைமையில் மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமைக்கப் போவதை கட்டியங் கூறிவிட்டது. ஆட்சி அமைப்பதில் மட்டுமல்லாமல், தமிழக அரசியலிலும் ஜெயலலிதா புதிய வரலாறையும், சாதனையையும் பொன்னெழுத்துக் களால் பொறித்துவிட்டார். அ.தி.மு.க. 134 இடங்களிலும், தி.மு.க. கூட்டணி 98 இடங்களிலும் வெற்றிப்பெற்றிருக்கிறது. பா.ம.க., மக்கள் நலக்கூட்டணி, பா.ஜ.க., நாம் தமிழர் ஆகிய கட்சிகளுக்கு ஒரு இடம்கூட கிடைக்கவில்லை. ஆக, இந்த தேர்தல் களத்தில் அ.தி.மு.க.வும், தி.மு.க.வும்தான் பிரதான ஆட்டக் காரர்கள் என்பதை வாக்காளர்கள் தெளிவாகவே கூறிவிட்டனர்.

இந்த தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. பெற்ற வெற்றி சாதாரண வெற்றி அல்ல, மகத்தான வெற்றி. 'நினைத்ததை நடத்தியே முடிப்பவன் நான் நான், துணிச்சலை மனதிலே வளர்ப்பவன் நான் நான்' என்று மறைந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஒரு படத்தில் பாடிய பாடல் இவருக்காகவே பாடினார் போலும். 234 தொகுதிகளிலும் அ.தி.மு.க. சின்னமாம் 'இரட்டை இலை' சின்னத்திலேயே வேட்பாளர்கள் போட்டி யிட்டனர். இந்த தேர்தலில் 6 முனைப் போட்டி இருந்தது. 5 முனைகளிலும் இருந்து வந்த தாக்குதல்களை தனி ஒருவராக நின்று சமாளித்தார். 4வது முறையாக ஆட்சியைப்பிடித்து, 6வது முறையாக முதல் அமைச்சர் பதவி ஏற்கப்போகிறார்.

1984ல் எம்.ஜி.ஆர். ஆட்சியைப் பிடித்து மறைந்தபிறகு, தமிழ்நாட்டில் எந்த தேர்தலிலும் ஆளும் கட்சி மீண்டும் அடுத்தமுறை வெற்றி பெற்றதாக சரித்திரமே இல்லை. 1989ல் தி.மு.க., 1991ல் அ.தி.மு.க., 1996ல் தி.மு.க., 2001ல் அ.தி.மு.க., 2006ல் தி.மு.க., 2011ல் அ.தி.மு.க. என்று தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் மாறி மாறி ஆட்சிக்கு வந்திருக்கிறது. ஆனால், அந்த நடைமுறையை முறியடித்து, தொடர்ந்து இந்த முறையும் வெற்றிபெற்று 32 ஆண்டுகளுக்குப்பிறகு புதிய வரலாறை ஜெயலலிதா படைத்துள்ளார். இந்த தேர்தலில் 'தந்தி' டிவி. தன் கணிப்பில் தொடக்கத்தில் இருந்தே அ.தி.மு.க.தான் ஆட்சியைப்பிடிக்கும் என்று கூறிவந்தது. மற்ற பல கணிப்புகள் அ.தி.மு.க.வுக்கு வெற்றி கிடைக்காது என்று கூறிவந்தன. அதையெல்லாம் முறியடித்து வெற்றிபெற்று இருக்கிறார்.

இந்த தேர்தலில் அவரது வெற்றிக்கு பக்கபலமாக இருந்தது, அவரது சிந்தையில் உதித்த வாக்குறுதிகளைக்கொண்ட தேர்தல் அறிக்கைதான். அவர் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் 50 தலைப்புகளில் வெளியிட்ட வாக்குறுதிகள் சமுதாயத்தில் ஒவ்வொருவருக் கும், ஒவ்வொரு பிரிவினருக்கும் பலன் அளிக்கக்கூடிய தாகும். கடந்த ஆட்சியில் தேர்தல் அறிக்கையில் சொன்னதை மட்டுமல்லாமல், சொல்லாததையும் செய்தேன் என்று தேர்தல் பிரசார கூட்டங்களில் சொன்னதுபோல, சொல்லாத பல திட்டங்களையும் அவர் ஆட்சியில் எதிர் பார்க்கலாம். இந்த திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற என்ன நிதி ஆதாரம் வைத்திருக்கிறீர்கள்? என்று தேர்தல் கமிஷனின் கடிதத்துக்கு ஒருசில மணித்துளி களில் பதில் அனுப்பிய ஜெயலலிதா, அந்த நிதி ஆதாரங்களை திரட்டி அனைத்து வாக்குறுதிகளையும் பதவி ஏற்ற நாளிலிருந்து தொடர்ந்து வரிசையாக நிறைவேற்றுவார் என தமிழ்ச்சமுதாயம் உறுதியாக நம்புகிறது. சட்டசபையில் 110வது விதியின் கீழ் வெளியிட்ட அனைத்து அறிவிப்புகளையும் நிறைவேற்றிய ஜெயலலிதா, அடுத்த 5 ஆண்டுகளில் நடத்தப்போகும் ஆட்சிக்கு இந்த தேர்தல் வாக்குறுதிகளே வழிகாட்டியாக இருக்கும். மொத்தத்தில், இந்த தேர்தலில் ஜெயலலிதா பெற்ற வெற்றி, அவரது அரசியல் மகுடத்தில் பதிக்கப்பட்ட ஒளிவீசும் வைரமாகும்.

சிறந்த நிர்வாகி என்பவன் யார்



**வாழ்க்கையில் முன்னேறியவரின் பாதையை சற்று திரும்பி பார்ப்போம்.**

# டி.வி.எஸ். நிறுவனத்தின் வரலாற்றுப் பதிவு

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடந்து நடந்து தேய்ந்து போயிருந்த தமிழர்களின் கால்களுக்கு ஓய்வுகொடுத்து, பேருந்துகளில் பயணிக்கவைத்த பெருமை டி.வி.சுந்தரம் ஐயங்காரையே சேரும். இன்றைக்கு 40க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கொண்ட மகா விருட்சமாய், ஆண்டுக்கு 13 ஆயிரம் கோடிக்கும் மேல் வியாபாரம் செய்யும் வர்த்தகக் குழுமமாய் பரந்து விரிந்திருக்கும் டிவிஎஸ் நிறுவனத்தைச் சேர்க்காமல் ஆசிய ஆட்டோமொபைல் வரலாற்றை எழுதமுடியாது. 1877 மார்ச் 22ல் டிவி. சுந்தரம் (சுருக்கமாக டிவிஎஸ்) பிறந்தார். திருச்சூரின் அரசு உயர்நிலைப் பள்ளியில் எட்டு ஆண்டுகளும், திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், கோயம்புத்தூர் போதனா பயிற்சிக் கல்லூரியிலும் படித்தார். அவரின் மனம் தொழில் தொடங்கவேண்டும் என்பதில் மையம் கொண்டு இருந்ததே தவிர, பெற்றோர் விரும்பியபடி படித்து வக்கீலாக வேண்டும் என்று நினைக்கவில்லை.

தந்தையாரின் மறைவுக்குப் பிறகு, தனது பங்காகக் கிடைத்த பணத்தை மூலதனமாகக் கொண்டு, தேக்கு மரங்களை இறக்குமதி செய்து மர வியாபாரம் செய்யலானார்.

50 ஆயிரம் ரூபாயை முதலீடாகக் கொண்டு, கான்பகதூர் காதர் நவாஸ்கான் என்ற பிரமுகருடன் கூட்டாக 1912ம் ஆண்டு தஞ்சாவூர் புதுக்கோட்டை வழித்தடங்களில் பேருந்து சேவையை நடத்தத் தொடங்கினார்.

கால வரையறை இல்லாமல் நினைத்த நேரத்துக்கு பேருந்தை இயக்குவது என்று ஒரு ஒழுங்கில்லாமல் இருந்த முறையை மாற்றியமைத்து, இன்றைக்கு இருக்கும் 'இவ்வளவு தூரத்துக்கு இவ்வளவு கட்டணம் என்னும் நடைமுறையையும், பயணிகள் கொடுக்கும் காசுக்கு 'ரசீது வழங்குவது' என்னும் நடைமுறையையும் கொண்டுவந்தவர் பேருந்து எப்போது புறப்பட்டு, எப்போது போய்ச் சேரும் என்பதே தெரியாமல் இருந்ததை மாற்றி, 'குறிப்பிட்ட நேரத்துக்கு இந்தப் பேருந்து புறப்படும்' என்ற நடைமுறையை நாட்டுக்கே டிவிஎஸ்தான் அறிமுகப்படுத்தினார்.

புதுக்கோட்டையில் பஸ் சர்வீஸ் நடத்தி வந்தபோதே, மேலைநாடுகளில் இருந்து மோட்டார் வாகனங்களையும், இயந்திரங் களின் உதிரிப்பாகங்களையும் சிறியஅளவில் இறக்குமதி செய்து மற்ற பேருந்து நிறுவனங்களுக்கு டிவிஎஸ் விற்பனை செய்துவந்தார். மதுரையில் சிறிய அளவில் ஒரு வியாபார நிறுவனத்தைத் தொடங்கினார். சைக்கிள்களையும், மோட்டார் வாகன உதிரி பாகங்களையும் விற்றுவந்த அந்த நிறுவனமே பலவிழுதுகள் பரப்பி விரிந்து நிற்கும் இன்றைய டிவிஎஸ் ஆலமரத்தின் விதையாகும்.

1929ல் ஜெனரல் மோட்டார்ஸ் கம்பெனியின் வாகனங்களுக்கும், உதிரிப பாகங்களுக்கும் டிவிஎஸ் நிறுவனம் நேரடி ஏஜென்ஸி உரிமை பெற்றது. இப்போது போலவே அப்போதும் கார்கள் தயாரிப்பில் ஜெனரல் மோட்டார்ஸ் தான் முன்னணியில் இருந்தது. 1929ம் ஆண்டு ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனத்தின் வாகனங்களுக்கும், உதிரிப் பாகங்களுக்கும் நேரடி ஏஜென்ஸி உரிமை பெற்றதுதான் டிவிஎஸ் வரலாற்றின் மிகப்பெரிய திருப்பு முனை!

தொழிலாளர்கள்தான் நிறுவனத்தை இயக்குகிறார்கள் என்பதை உணர்ந்த டிவிஎஸ், தொழிலாளர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கப் பட்டதாலேயே, தாத்தாஅப்பாபேரன் கொள்ளுபேரன் என்று நான்கு தலை முறையாகத் தொடர்ந்து இதே நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிற பல குடும்பங்கள் உண்டு.

டிவிஎஸ், தம் வாரிசுகள் அனைவரையும் தொழிலாளர்களுடன் இணைந்து வேலை செய்யுமாறு செய்தார். அந்த நடைமுறை இன்றுவரை தொடர்கிறது. டிவிஎஸ் நிறுவனத்தில் இன்றைக்கு இயக்குநர்களாகவும் பங்குதாரர்களாகவும் இருக்கும் அனைவரும், காக்கி யூனிஃபார்முடனும் கிரீஸ் கறையுடனும் தொழிலாளிகளோடு தொழிலாளியாக வேலை செய்தவர்கள்! டிவிஎஸ்ஸில் ஐஎன்டியுசி எனும் ஒரே ஒரு தொழிற் சங்கம்தான் இருக்கிறது. தொழிற்சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றும் முன்னரே அவர் களை அழைத்துப் பேசி குறைபாடுகளைத் தீர்த்து வைப்பார்களாம்!

சுந்தரம் அய்யங்கார் முற்போக்குச் சிந்தனை கொண்டவர். இளம் வயதில் கைம் பெண்ணான தன் மகள் தி.சு.சௌந்தரத்துக்கு மகாத்மா காந்தியின் ஆசியுடன் மறுமணம் செய்து வைத்தார். தி. சு. சௌந்தரம் இந்திய விடுதலைப் போரில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். இந்திய அரசு தி.சு.சௌந்தரத்தின் அஞ்சல் தலையை வெளியிட்டு அவரை பெருமைப்படுத்தியது .வெற்றிகரமான தொழிலதிபராக விளங்கிய இவர் கலைகளையும் ஆதரித்தார் . தான் ஓய்வு பெற்று வணிகத்தை தன் மகன்களிடம் ஒப்படைத்ததைக் கண்டு இராசகோபாலாச்சாரி இவரைப் பாராட்டினார். ஏப்ரல் 28, 1955 இல் அதிகாலையில் கொடைக்கானலில் உள்ள தன் வீட்டில் இறந்த போது இவரது வயது 78. இவரைப் பெருமைப படுத்தும் விதத்தில் வெண்கலமும் பளிங்கும் கொண்ட இவரின் மார்பளவு உருவச்சிலை மதுரையில் ஆகஸ்டு 7, 1957 இல் அந்நாள் மத்திய வணிக அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

ஒரு தொழில் நிறுவனத்தை எவ்வாறு நிர்வாகம் செய்ய வேண்டும் மற்றும் அத்தொழில் விரிவடைய வேண்டும் என்பவர்களுக்கு இது ஒரு பாடமாகவும் வழிகாட்டியாகவும் அமையும் என்பதில் சிறிதளவு கூட சந்தேகமில்லை. மற்றும் இப்படிப்பட்டவர்களை பார்த்து நாமும் வாழ்க்கையில் முன்னேறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது சாலச் சிறந்ததாகும்.

ஒரு தொழில் நிறுவனத்தை எவ்வாறு நிர்வாகம் செய்ய வேண்டும் மற்றும் அத்தொழில் விரிவடைய வேண்டும் என்பவர்களுக்கு இது ஒரு பாடமாகவும் வழிகாட்டியாகவும் அமையும் என்பதில் சிறிதளவு கூட சந்தேகமில்லை. மற்றும் இப்படிப்பட்டவர்களை பார்த்து நாமும் வாழ்க்கையில் முன்னேறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது சாலச் சிறந்ததாகும்.

# வருமான வரித்துறையின் புதிய சலுகை

இந்தியாவிலுள்ள மொத்த ஜனத் தொகையில் 4 சதவீதம் பேர் மட்டுமே வருமான வரிக்கணக்கை தாக்கல் செய்துள்ளனர் என்று வருமானவரித் துறை தெரிவித்துள்ளது. அதிலும், ரூ.10 லட்சத்துக்குமேல் ஆண்டு வருமானம் பெறுபவர்கள் என்ற வகையில், 10 லட்சம் பேர்கள்தான் உள்ளனர் என்பது வியப்பாக இருக்கிறது. நிச்சயமாக இந்த கணக்கு ஏற்புடையது அல்ல.

வரிஏய்ப்பு செய்பவர்களை கண்டுபிடிப்பதற்காக, வருமான வரித்துறையினர் ஆங்காங்கு நடவடிக்கை எடுத்தாலும், தானாகவே முன்வந்து வருமானவரியை கட்டுவதற்கான ஊக்க நடவடிக்கைகளை வருமானவரித்துறை எடுத்துவருகிறது.

கணக்கில் காட்டாமல் பணத்தை பதுக்கிவைத்திருப்பவர்கள் தாங்களாகவே முன்வந்து கணக்குகாட்டி, வருமானவரியை கட்டுவதற்கான ஒரு புதிய திட்டத்தை இப்போது வருமானவரித்துறை அறிவித்துள்ளது. இந்த திட்டம் 4 மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும். ஜூன் 1ந் தேதி தொடங்கி செப்டம்பர் 30ந் தேதி வரை இந்தத்திட்டம் கணக்கில் காட்டாமல் பணம் வைத்திருப்பவர்களை கணக்குகாட்டி வருமானவரி கட்ட கதவுகளை திறந்துவைத்துக்கொண்டு அழைத்துக்கொண்டிருக்கிறது. இதன்படி, தாங்களாகவே முன்வந்து கணக்கை தெரிவித்து வருமானவரிகட்ட விரும்புகிறவர்கள், மொத்த தொகைக்கு 30 சதவீத வரி, அந்த வரித்தொகையில் 25 சதவீதம் விவசாய வரி, இதுமட்டுமல்லாமல், இந்த வரித்தொகையில் 25 சதவீதம் அபராதம் என்று சொல்லி, ஆக மொத்தம் 45 சதவீதம் வரிகட்ட வேண்டிய ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு வருமானவரி கணக்கை செப்டம்பர் 30ந் தேதிக்குள் தாக்கல் செய்பவர்கள், அதற்கான வரி, சர்சார்ஜ் மற்றும் அபராதத்தை நவம்பர் 30 ந் தேதிக்குள் முழுமையாக கட்டவேண்டும் என்று நிதியமைச்சகம் அறிவித்துள்ளது.

இவர்களின் கணக்குகளை ஆய்வோ, விசாரணையோ செய்யமாட்டார்கள். வருமானவரிச்சட்டம் மற்றும் சொத்துவரி சட்டம், அதுமட்டுமல்லாமல், பினாமி பரிமாற்றங்கள் தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்கு தொடரப்படவும் மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பை தவறவிடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் பாயும், வழக்குகள், கடுமையான அபராதம் என்ற நிலை எல்லாம் தவிர்க்க, இந்த செப்டம்பர் மாதம் 30ந் தேதி வரையுள்ள காலஅவகாசத்தை பயன்படுத்தி, கணக்கில் காட்டாமல் பணத்தை பதுக்கி வைத்திருப்பவர்கள் கணக்கைக்காட்டி, உரிய வரியை செலுத்தி யாருக்கும் பயமில்லாமல் நெஞ்சை நிமிர்த்தி வாழ்வதே நல்லது. ஆனால், இதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்கும் வருமான வரித்துறை, இவ்வாறு 45 சதவீத வரிவிதிப்பதற்கு பதிலாக, சற்று குறைத்தால் ஏராளமானவர்கள் தாங்களாகவே முன்வந்து வரிகட்டுவதற்கான வாய்ப்பும் இருக்கிறது. மேலும், தங்கள் வருமானத்தில் பெரும்பகுதி வரியை கட்டவேண்டிய நிலை இருக்கிறதே என்ற அச்சத்தில்தான் வருமானவரி கணக்கை தாக்கல் செய்யாமல் இருக்கிறார்கள். என்னதான் மற்ற நாடுகளில் வருமானவரி விகிதம் அதிகமாக இருந்தாலும், இந்தியாவில் வருமானவரி கட்டவேண்டும் என்ற உணர்வை ஊக்குவிக்க, வரி விகிதங்களை சற்று குறைத்தால் நல்லது. அதிகம் படிப்பறிவில்லாத ஆனால், வருமானவரி கட்டக்கூடிய அளவில் சம்பாதிப்பவர்களும், வருமானவரி கட்டுவதைக்கண்டு பயந்துவிடாமல், தொழில்வரி, விற்பனைவரிபோல, வருமானவரியும் ஒரு வரிதான் என்ற உணர்வில், தாங்களாகவே முன்வந்து கட்டும் வகையில் வருமானவரி கட்டும் முறைகள் எளிதாக்கப்பட வேண்டும்.




## அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியது

1. தமிழ் வருடங்கள்(60)
2. அயணங்கள்(2)
3. ருதுக்கள்(6)
4. மாதங்கள்(12)
5. பக்ஷங்கள்(2)
6. திதிகள்(15)
7. வாஸரங்கள்(நாள்)(7)
8. நட்சத்திரங்கள்(27)
9. கிரகங்கள்(9)
10. இராசிகள் மற்றும் இராசி அதிபதிகள்(12)
11. நவரத்தினங்கள்(9)
12. பூதங்கள்(5)
13. மஹா பதகங்கள்(5)
14. பேறுகள்(16)
15. புராணங்கள்(18)
16. இதிகாசங்கள்(3)

# மொழியின் வரலாறு

எது உண்மையான மொழி, எது வட்டார மொழி என்பதில் மொழி வல்லுனர்களிடம் கூடக் குழப்பம் இருக்கிறது. என்றாலும் உலகம் முழுமையிலும் இன்று 2500 முதல் 5 ஆயிரம் மொழிகள் வரை உள்ளன. மொழிகள் எப்படி தோன்றி இருக்கும் என்பதிலும் நிபுணர்களிடம் ஏகப்பட்ட கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.

மொழிகள் தோற்றம் பற்றி மாக்ஸ் முல்லர் மூன்று வகையான கொள்கையைக் கூறியிருக் கிறார்.

முதல் கொள்கைக்கு 'பௌ பௌ' கொள்கை என்று பெயர் வைத்துள்ளார். இதன்படி ஆதிகால மனிதன் நாயை குறிப்பிட வேண்டும் என்றால் அது கத்துவது போல், "லொள் லொள்" என்று கூறியிருப்பான். பூனையை 'மியா மியா' என்று சொல்லியிருப்பான். மஇவ்வாறு இன்றுள்ள பல உயிரினங்களின் பெயரை நாம் ஆராய்ந்தால் அந்த விலங்கு ஏற்படுத்திய ஒலியை அடிப்படையாக கொண்டிருப்பதைக் காணலாம்மே. இதனை 'ஓனமாடோ போயடிக்' கொள்கை என்று கூறுவார்கள்.

இரண்டாவது கொள்கை, உணர்ச்சிவசப்படும்போது இயல்பாக எழும் ஒலிக்குறிப்புகளே மொழிக்கு அடிப்படை என்கிறார். உணர்ச்சிகளின் வெளிப்பாடுகள் என இதை நாம் கருதலாம். கோபத்தில் கத்துவது, காதல் வயப்படும் போது காதல் புலம்பல் இவற்றை இதற்கு உதாரணமாக கூறுகிறார்கள்.வலி தாங்க முடியாமல் 'ஓ' 'ஆ' என்று கத்துவது, வியப்பால் கத்துவது என்பது போன்றவை எல்லாம் உணர்ச்சி வெளிப்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை. கலகலவென சிரிப்பதும் ஒருவித மகிழ்ச்சி உணர்வே. மொழிக்கு உணர்ச்சிகள் அடிப்படையாக உள்ளதை இந்த இரண்டாவது கொள்கை விளக்குகிறது.

மூன்றாவது கொள்கை, "யோஹிமோ" என்பது. ஒரு செயலை செய்யும்போது இயற்கையாக எழும் ஒலிக்குறிப்பே இது. ஒரு கயிற்றை இழுக்கும்போதோ, நடனம் ஆடும்போதோ பெருமூச்செறிதல் போன்ற ஒலியை அடிப்படையாக கொண்டது. இன்றைக்கும் கூட கடினமான ஒரு காரியத்தை செய்யும்போது 'அம்மா' 'அப்பா' 'ஐயோ' 'ஹை' போன்ற ஒலிகள் நம்மை அறியாமலேயே பிறக்கின்றன. 'ஐலேசா' 'ஏலேலோ' போன்ற பாடல்களும் இந்த கொள்கையின் அடிப்படையில் பிறந்தவைதான். ஒவ்வொரு தொழில் செய்யும்போதும் நாம் ஒவ்வொரு முயற்சிக்கும் ஒவ்வொரு வித ஊக்க ஒலி, ஆதியில் தோன்றி மொழியாக வளர்ந்திருக்கலாம் என்பதுதான் இந்த கொள்கையின் கருத்து. மொழிகள் வளர்ச்சி அடைவதற்கு முன்பு இத்தகைய ஒலிக்குறிப்புகள் அதற்கு அடிப்படையாக இருந்திருக்கலாம். மொழியின் அடிப்படை தத்துவமே நமது கருத்தை பிறருக்கு அறிவிப்பதும், பிறர் கருத்தை நாம் அறிந்து கொள்வதும், அதற்கு ஏற்ப எதிர்வினை ஆற்றுவதும் தான், மாக்ஸ் முல்லர் குறிப்பிட்ட இந்த மூன்று கொள்கைகளும் மொழி தோன்ற அடிப்படைக் காரணமாகக் கூறப்படுகிறது.









2. எழுத்து ஒலியும்

மொழி இருவகைப்படும். மூன்று வாய்மொழி. மற்றொன்று எழுத்து மொழி. கிரேக்கம், நார்வே போன்ற நாடுகளில் வாய் மொழியை 'தாய்மொழி' என்றும் எழுத்து மொழியை 'மாமியார் மொழி' என்றும் சொல்லுகிறார்கள். மனிதன் தனது உணர்ச்சிகளை ஒலியாக வெளியிட்டான். அந்த ஒலியில் இருந்து மொழி தோன்றியது. மனிதன் மட்டுமல்ல, விலங்குகளும் தங்கள் உணர்ச்சிகளை ஒலியாக வெளியிடுகின்றன. அவை விலங்கு மொழி ஒரு மொழியை சேர்ந்தவன்பேசுவது அடுத்த மொழிக்காரனுக்கு புரியாதது போல், ஒரு விலங்கு இனம் பேசுது அடுத்து விலங்கு இனத்துக்கு புரிவது இல்லை.

ஒலியை கடவுளுக்கு சமமாக மதித்தார்கள் 'நாதப்பிரம்மம்' என்றார்கள் (நாதம்ஒலிபிரம்மம்கடவுள்) எழுத்து என்பதற்கு சூட்சுமம், தூலம் என்று இருவகைப் பொருள்படும் என்றும், ஒலிமயமான இறைவனின் தத்துவத்தை முதலில் விளக்குகிறது என்றும் தமிழின் முதல் கலைக்களஞ்சியம் என்று கருதப்படும் என்றும் தமிழின் முதல் கலைக்களஞ்சியம் என்று கருதப்படும் 'அபிதான சிந்தாமணி' கூறுகிறது. எழுத்து என்பதற்கு இறைவன் பரம்பொருள் என்று தமிழ் அகராதி பொருள் கூறுகிறது. "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்று வள்ளுவரும் எழுத்தை இறைவனுக்கு உவமை காட்டுகிறார்.

முதல் மனிதன் தன் கண்ணால் பார்த்ததை கையால் படமாக வரைந்தான். செய்கையால் வெளிப்படுத்த, விளக்க முடியாததைப் படம் வரைந்து காட்டினான். இந்த வழக்கத்தில் இருந்து தோன்றியதுதான் எழுத்துமொழி. இதை வரி வடிவம் என்பார்கள். ஓவிய எழுத்துக்கள் என்று கூறுவதும் உண்டு இன்றும் சீன ஜப்பானிய மொழிகளின் வரி வடிவம் ஓவிய எழுத்துக்களே, 'எழுத்து' என்பதற்கு 'ஓவியம்' என்றும் பொருள் உண்டு.

ஒலி வடிவம், வரி வடிவம் இரண்டில் எது முதலில் தோன்றியிருந் தாலும், செய்திகள் பரவ, வரி வடிவ எழுத்துக்களே பெருந்துணையாக இருந்தன. இன்றும் இருக்கின்றன. வாய்மொழி ஒருசிலரிடம் பரவும். எழுத்து மொழி எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பரவக் கூடியது. வாய்ச்சொல்லை சொன்னவரும், கேட்டவரும் மறக்க முடியும், மறுக்க முடியும். எழுத்துச் சொல் எப்பொழுதும் நிலையானது ஏட்டில் எப்பொழுதும் இருக்கும் தலைமுறை தலை முறையாக எப்பொழுது வேண்டுமானாலும் படித்துக் கொள்ளலாம். இதனால்தான் "ஏடுகள் இல்லையென்றால், எழுத்துகள் ஊமையாகி விடும்"என்று பார்த்த லோனி என்ற அறிஞர் சொன்னார். "எழுதப்பட்ட சொல் நிலையானது" என்பது இலத்தீன் பழமொழி



# குத்தகைக்கு விடப்பட்ட இந்தியா- கி.பி. 1700

மொகலாய மன்னர் முதலாம் பகதூர் க்ஷா ஜாஃபர் (Bhahdur Sha Jafar-I) மொகலாள மன்னர் ஔரங்க சீப்பிற்கு (Aurang Zeb) பின் ஆட்சிக்கு வந்தவர். அவருடன் போரிட்டு பிரிட்டிக்ஷ் கிழக்கிந்தியக் கம்பெனி (British East India Company) வென்றது. அனால் மொகலாய ஆட்சிக்குக் கட்டுப் பட்டிருந்த குறுநில மன்னர்கள் முதலாம் பகதூர் க்ஷா ஜாஃபருக்கு எதிராகக் கிளம்பினார்கள். அவருக்குக் கப்பம் கட்ட மறுத்தார்கள்.

முதலாம் பகதூர் க்ஷா ஜாஃபருக்கு வரி கட்டிக் கொண்டிருந்த கிழக்கிந்தியக் கம்பெனி கி.பி. 1717ஆம் ஆண்டு, மன்னருக்கு வரி கட்டுவதிலிருந்து முற்றிலும் விலக்குப் பெற்றது.

பின்னர் அந்தக் கம்பெனி குறுநில மன்னர்களிடமிருந்து வரி வசூல் செய்யத் தொடங்கியது. அதோடு மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஒவ்வொரு பகுதியையும் கைப்பற்றும் முயற்சியிலும் இறங்கியது.

கி.பி. 1757ஆம் ஆண்டு வங்காளத்தில் நவாப் சிராஜ்உத்தௌலாவை (Siraj-Ud-Daula) எதிர்த்து ஆங்கிலப் படைத் தளபதி ராபர்ட் கிளைவ் வங்காள நவாப்பை மிக எளிதாகத் தோற்கடித்தார்.

இந்த வங்காளப் போர்தான் இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு அடித்தள மிட்டது. மொகலாய மன்னருக்கு பணிவான மரியாதை செலுத்துபவர் களாகவும் இருந்த ஆங்கிலேயர்கள், சிறிது சிறிதாக அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சியாளர் களாக மாறத் தொடங்கினர்.

இந்தியாவுக்கு வர்த்தகம் செய்யப்போன கிழக்கிந்தியக் கம்பெனி, அங்கு தனது ஆதிக்கத்தின் கீழ் இந்தியா முழுவதையும் கொண்டு வந்திருக்கிறது. என்பதை 1760களில் பிரிட்டிக்ஷ் அரசு உணரத் தொடங்கியது.

சில காலம் சென்றபின் தொழிற் புரட்சிக்குப் பிந்தைய பொருளாதார மந்த நிலை வங்காளத்தில் ஏற்பட்ட கடும் வறட்சி மற்றும் இழப்பு, இந்தியத் தேயிலையை அதிகமாக இறக்குமதி செய்த அமெரிக்கா வில் எழுந்த சுதந்திர உணர்வு, இந்திய மன்னர்களுடனான தொடர் சண்டை ஆகிய, கிழக்கிந்தியக் கம்பெனியைச் சிறிது பின்னடையச் செய்தது. இதனால் அந்தக் கம்பெனி பிரிட்டிக்ஷ் அரசிடம் நிதி உதவி கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

உடனே பிரிட்டிக்ஷ் அரசு கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பெரிய அதிகாரமளிக்கத் தொடங்கியது, 'கிழக்கிந்தியக் கம்பெனி கைப் பற்றும் நாடுகள் பிரிட்டிக்ஷ் ராஜாங்கத்துக்கு உட்பட்டவைதான், பிரிட்டிக்ஷ் ராஜாங்கத்தி



ன் சாப்பில் கைப் பற்றப்பட்டவைதான்' என்று பிரிட்டன் பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டது.

இதனால் பிரிட்டிக்ஷ் அரசுக்குச் சொந்தமாகிவிட்டிருந்த இந்திய மண்ணில் கிழக்கிந்தியக் கம்பெனி ஆதிக்கம் செலுத்த, அந்தக் கம்பெனிக்கு இந்திய குத்தகைக்கு விடப்பட்டது.

அன்றைய பண மதிப்பில் 40,000 பவுண்டுகளுக்கு (இன்று ஒரு பிரிட்டிக்ஷ் பவுண்டின் இந்திய மதிப்பு ரூபாய் 80) இரண்டு ஆண்டுகளுக்கு இந்தியா முழுவதையும் கிழக்கிந்தியக் கம்பெனி குத்தகைக்கு எடுத்துக் கொண்டு ஆள பிரிட்டிக்ஷ் மன்னர் மூன்றாம் ஜார்ஜ் (George III) அனுமதி அளித்தார்.



# மாதம் ஒரு ஆலயம்

அருள்மிகு தட்சிணாமூர்த்தி திருக்கோயில்

மூலவர் : தட்சிணாமூர்த்தி

தல விருட்சம் : ஆலமரம்

தீர்த்தம் :

ஆகமம்/பூஜை : காமிகம்

பழமை : 500 1000 வருடங்களுக்கு முன்

ஊர் : கோவிந்தவாடி

மாவட்டம் : காஞ்சிபுரம்

மாநிலம் : தமிழ்நாடு

பாடியவர்கள் :

திருவிழா :

சித்திரையில் குருபகவான் பூஜை, குருப்பெயர்ச்சி, மகாசிவராத்திரி, மாசியில் சங்காபிஷேகம்.

தல சிறப்பு : நாகதேவதை தனது இரண்டு கால்களையும் பாதி மடக்கிய நிலையில் வித்தியாசமாக காட்சி தருகிறார். இங்குள்ள விநாயகர் ஆவுடையார் மீது அமர்ந்தபடி "ஆவுடை விநாயகர்" என்ற திருநாமத்துடன் இருப்பது சிறப்பு.

பொது தகவல் : இத்தலத்தில் கைலாச நாதர், அகிலாண்டேஸ்வரி, சந்தன குங்கும கோவிந்தன் ஆகியோர் தனித்தனி சன்னதிகளில் அருள்பாலிக்கின்றனர்.

பெருமாள் தனிச்சன்னதியில் மேற்கு பார்த்தபடி இருக்கிறார். அருகில் ஸ்ரீதேவி, பூதேவி, ஆஞ்சநேயர், கருடாழ்வார் ஆகியோர் உள்ளனர்.

கோவிந்தனாகிய திருமால், சிவனை துதித்து பாடல்கள் பாடி வழிபட்ட தலம் என்பதால் 'கோவிந்தபாடி' எனப்பட்ட இவ்வூர், பிற்காலத்தில் 'கோவிந்தவாடி' என்று மருவியது.

பிரார்த்தனை : குருதோஷம் நீங்க இங்கு வேண்டிக் கொள்ளலாம்

நேர்த்திக்கடன்: அம்பாளுக்கு சுமங்கலி பூஜை செய்து வழிபட்டால் திருமணம் கைகூடுவதாக நம்பிக்கை. இங்கு வேண்டிக் கொண்டு பிரார்த்தனைகள் நிறைவேறியவர்கள் தட்சிணாமூர்த்திக்கு 'தேங்காய் தீபம்' ஏற்றியும் நேர்த்திக்கடன் செலுத்து கிறார்கள்.

தல வரலாறு: ஒருசமயம் மகாவிஷ்ணு பக்தன் ஒருவனை காக்க போரிட்டபோது, அவரது சக்கரம் அங்கு தவம் செய்து கொண்டிருந்த துதீசி எனும் முனிவர் மீது பட்டு, முனை மழுங்கியது. தனது முதன்மையான ஆயுதமான சக்கரம் பயனில்லாமல் போனதால் மகாவிஷ்ணு ஆயுதம் இன்றி இருந்தார். எனவே, அச்சக்கரம் தனக்கு மீண்டும் கிடைக்க என்ன செய்வ தென்று தேவர்களுடன் ஆலோசனை செய்தார். சிவனை வேண்டினால் சக்கரம் கிடைக்கும் என அறிந்து கொண்டார். சிவனை வணங்கி அருள்பெற 'சிவதீட்சை' பெற வேண்டும் என்பது நியதி. எனவே அவர் ஸ்ரீதேவி, பூதேவியுடன் இத்தலம் வந்தார். இங்குள்ள தீர்த்தத்தில் நீராடி சிவனை எண்ணி தவம் செய்து வேண்டினார். அவருக்கு காட்சி தந்த சிவன், குருவாக இருந்து சிவதீட்சை செய்து வைத்து உபதேசம் செய்தார். மேலும், "இத்தலத்திற்கு அருகில் உள்ள ஓர் தலத்தில் (திருமால்பூர்) லிங்க வடிவத்தில் இருக்கும் தன்னை ஆயிரம் மலர்கள் கொண்டு பூஜை செய்து வழிபட்டு வர உரிய காலத்தில் சக்ராயுதம் கிடைக்கப்பெறும்" என்றும் கூறினார்.

அதன்படி மகாவிஷ்ணு, அருகில் உள்ள திருமால்பூர் சென்று சிவனை வணங்கி தவம் செய்து சக்ராயுதம்பெற்றார். மகாவிஷ்ணுவிற்கு குருவாக காட்சி தந்த சிவன் இத்திலத்தில் தெட்சணாமூர்த்தியாக அருளுகிறார்

சிறப்பம்சம்: அதிசயத்தின் அடிப படையில் : நாக தேவதை தனது இரண்டு கால் களையும் பாதி மடக்கியநிலையில் வித்தியாச மாக காட்சி தருகிறார். இங்குள்ள விநாயகர் ஆவுடையார் மீது அமர்ந்தபடி 'ஆவுடை விநாயகர்' என்ற திருநாமத்துடன் இருப்பது சிறப்பு.



# இது விளம்பரமல்ல...!உண்மை...!

தமிழ் நாட்டிலேயே முன்னோடியாக இருக்கக் கூடிய ஒரு நகரம் எது என்றால் சென்னை. சக்கரை வியாதிக்கான மிகப் பெரிய வணிகச் சந்தையை தனக்குள்ளே உள்ளடக்கிக் கொண்டு, நடைப்பிணமாய் திரியக் கூடிய தமிழ் சமூகம் இன்று உருவாகி உள்ளது. அதற்கான காரணங்கள் என்ன? அது எப்படியெல்லாம் வருகிறது? அதை எப்படி தடுக்கலாம்? அதற்கான உணவு முறை கட்டுப்பாடுகள் என்ன? இதையெல்லாம் முழுமையாக அலசி ஆராயப்போகிறோம். முதலில் நீரிழிவு என்பது அன்றே சித்தர்களால் மது மேகம் என்ற பெயரில் சொல்லப்பட்டது. இந்த மது மேகம் எப்படியெல்லாம் வரும் என்பதை விளக்கும் சித்தர் பாடலானது ....“கோதையார் களவின் போதை கொழுத்த மீனிறைச்சி போதை பாலுடன் நெய்யும் பரிவுடன் உண்பீராகில் வருமே பிணி“ என்று மது மேகத்தைப் பற்றி சொல்கிறார்கள் சித்தர்கள். அதாவது கோதையார் களவின் போதை என்று சித்தர்கள் சொல்லக் கூடிய ஒரு பெரிய காரணி என்ன என்றால் உடலுறவில் ஈடுபடும் பொழுது முழுமையாக செயல்படக் கூடியது நாளமில்லாச் சுரப்பி மண்டலம் ஆகும். ஆதலால் மதுமேக நோய் என்பது ஒரு ஹார்மோனல் கிருமி என்கிறார்கள். உடலில் இன்சுலின் என்கிற ஹார்மோன் குறைவதால் வரக் கூடிய நோய் இதுவாகும்.

சித்தர்கள் அன்றே தெளிவாக கூறியிருக்கிறார்கள் “கோதையார் களவின் போதை, கொழுத்த மீனிறைச்சி போதை“ என்றால் நிறைய அசைவ உணவுகள், மந்த உணவுகள் எடுத்துக் கொண்டால் இந்த உணவின் மூலம் பாலியல் சார்ந்த உணர்வுகள் தூண்டப்பட்டு அதன் அடிப்படையில் அடிக்கடி பாலியல் சார்ந்த உறவுகளில் ஈடுபடும் பொழுது மது மேகம் என்ற நோய்க்கு மனிதர்கள் ஆட்படுகிறார்கள் என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

அதே போல் “பாலுடன் நெய்யும், பரிவுடன் உண்பீராகில்“ என்பது பாலாக இருந்தாலும் சரி, நெய்யாக இருந்தாலும் சரி அதை அரிசியோடு சேர்த்து எடுக்கும் கால கட்டத்தில் நீரிழிவு கண்டிப்பாக வரும் என்பது சித்தர்களின் கூற்று. இந்த மதுமேகந்தான் இன்று உலகையே அச்சுறுத்தக் கூடிய நீரிழிவு என்னும் நோயாகும்.. இந்த நீரிழிவு நோய் என்பது இன்று அனைவருக்கும் பொதுவாகி விட்டது. நீரிழிவில் மூன்று வகையான நீரிழிவுகளைப் பார்க்கிறோம். குழந்தை களுக்கு வரக்கூடியது (யிஹுஸ்மீஸீவீறீமீ) நீரிழிவு என்று சொல்கிறார்கள் இது முதல் விதம். இரண்டாவது மருந்துகளால் கட்டுப்படக் கூடிய நீரிழிவாகும்.

மருந்தே இல்லாமல் இன்சுலினுக்கு கட்டுப்படக்கூடிய நீரிழிவு. இது மூன்றாவது விதம். என்று மூன்று விதமான நீரிழிவு இருக்கிறது. சர்க்கரை நோய் ஒருவருக்கு வந்து விட்டது என்றால் அவருடைய முழுமையான செயல்பாடுகள் சிறிது சிறிதாக குறைய ஆரம்பித்து விடும். உடல் மெலிந்து விடும், அடிக்கடி சிறுநீர் கழிக்கக் கூடிய தன்மை இந்த மாதிரி அதன் அறிகுறிகளை கொடுமையாக வெளிப்படுத்தக் கூடிய ஒரு கால கட்டம் உண்டு.

இன்று தமிழ் நாட்டில் தமிழ்ச் சமூகம் சந்திக்கக் கூடிய ஒரு பெரிய பிரச்சினை என்ன என்றால் நீரிழிவு நோய், இது ஒரு குறைபாடு தான். இக்குறைபாட்டிலிருந்து நாம் மீள முடியும் என்கிற தன்னம்பிக்கையை இழந்து விட்டு எப்பொழுதும் மருந்துகளையு ம , மருத்துவ ர்களையும் தேடி அவர்கள் பின்னாலேயே ஓடக் கூடிய ஒரு நிலை யில் தான் தமிழ் மக்கள் இன்று இருக்கிறார்கள். அதற்கான காரணம் என்ன என்று பார்த்தால், எவ்வளவோ உணவுப் பொருட்கள் சொல்லப்பட்டிருந்தாலும் நமக்கு அந்த பாரம்பரியமான உணவுப் பொருட்கள் இந்நோயை கட்டுப்படுத்தக் கூடிய தன்மையில் இருந்தாலும் கூட அந்த உணவுகளை நாம் எடுக்கத் தயாராக இன்று இல்லை.

இந்த சர்க்கரை நோய்க்கான காரணம் என்ன என்றால் அடித்துச் சொல்லலாம் உணவு முறைகளின் முரண்பாடுதான். இது பாரம்பரிய நோய், இது அம்மா அப்பாவுக்கு இருந்தால் நமக்கும் வரும் என்பது உண்மையாக இருந்தாலும் கூட அதைக் கண்டிப்பாகத் தடுக்க முடியும். எனவே அதற்கான உணவுகள் என்னென்ன? அதை எப்படியெல்லாம் நாம் பயன்படுத்தலாம் என்பதை தொடர்ந்து பார்க்கலாம்.

சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்த ...

வெந்தயம்: சர்க்கரை நோயை பிரதானமாக கட்டுப்படுத்தக்



கூடிய தன்மை வெந்தயத்திற்கு உண்டு. வெந்தயத்தைப் பிரித்தால் வெந்த + அயம். வெந்த என்றால் பஸ்பமாகி விட்டது என்று அர்த்தம். அயம் என்றால் இரும்பு என்று பொருள். இரும்பை பஸ்பமாக்கக்கூடிய ஒரு பொருள் எது என்றால், அது வெந்தயம் தான். தொடர்ந்து வெந்தயத்தை வறுத்து வைத்துக் கொண்டு, தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டே வந்தால் கூட நீரிழிவு நோய் முழுமையாகக் கட்டுப்படுத்தலாம்.




நீரிழிவு நம் உடம்பை மென்மையாக்குகிறது. அப்பொழுது நன்றாக உண்ணக்கூடிய உணவுப் பொருட்களைச் சாப்பிட வேண்டும். நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள், எந்த உணவுப் பொருட்களில் துவர்ப்பு சக்தி அதிகமாக இருக்கிறதோ உதாரணமாக வாழைப்பூ, பாகற்காய் தென்னைமரப் பூ, நெல்லி, கடுக்காய், தான்றிக்காய் அவைகள் நீரிழிவை கட்டுப்படுத்தும்.

இப்பொழுது DNA கூட்டமைப்பு உள்ள human Insulin இன்று உலகம் முழுக்க வந்துவிட்டது. ஆனால் அதற்கு முன்பு கோரைக் கிழங்கையே பிரதானமாகச் சாப்பிடக் கூடிய பன்றிகளின் கணையத்திலிருந்து இன்சுலின் எடுக்கப்பட்டது, பருத்திக் கொட்டையையும், எள்ளுப் புண்ணாக்கையும் சாப்பிட்ட எருமை மாட்டுக் கணையத்திலிருந்து இன்சுலின் எடுக்கப்பட்டது. இதில் ஒரு ஆச்சர்யம் என்றால் சித்தர்களுக்கு எவ்வாறு இது தெரிந்தது என்று தெரியவில்லை. ஏன் என்றால் பிரதானமாக பருத்திக் கொட்டையிலேயும், கோரைக் கிழங்கிலேயும், எள்ளுப் புண்ணாக்கிலேயும் இன்சுலின் அளவு அப்படியே இருக்கிறது.

அதில் உள்ள கந்தகச் சத்து அப்படியே வரும். நம் உடம்பில் இருக்கக் கூடிய கார்போஹைட்ரேட் ஐ முழுமையாகக் கரைக்கக் கூடிய தன்மை இதற்கு உண்டு.

அதனால் தான் இன்றும் எனது கிராமத்தில் சர்க்கரை நோய் என்று கூறினால் யாரும் தொடர்ந்து மாத்திரை சாப்பிடுபவர்களை பார்க்கவே முடியாது. மிக எளிமையாக அரைக் கிலோ எள்ளு புண்ணாக்கு, அரை கிலோ பருத்திக் கொட்டை, அரை கிலோ ஆவாரம்பூ , 100 கிராம் கருஞ்சீரகம் இவற்றை உரலில் இட்டு இடித்து வைத்துக் கொள்கிறார்கள். இதில் ஒரு கையளவு எடுத்து சிறிது கருப்பட்டி, பனைவெல்லம் சேர்த்து இக்கலவையை நன்கு கொதிக்க வைத்து, அதை நன்றாக வடிகட்டி காலையிலேயும், இரவிலேயும் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் சர்க்கரை நோய் தானாகவே சரியாகிவிடும்.

நீரிழிவு நோயாளிகள் உடம்பில் அதிகம் நீர்ச்சத்து இழக்காமல், தண்ணீர் தாகம் அதிகம் இல்லாமல், நாவு வறட்சி இல்லாமல் இருக்க கவனம் செலுத்த வேண்டும். நாம் மேலே கூறிய உணவுகளை எல்லாம் தொடர்ந்து எடுத்துக்கொள்ளும் பொழுது நல்ல பலன் கிடைக்கும்.






# ஓவியம் வரைந்தவர்



**எஸ்.ஜானகி**

**IX Std**

**GOOD SHEPHERD**

**MATRICULATION HIGHER SECONDARY SCHOOL**


# மித்ரா டைம்ஸ் மாத இதழ்

ஆண்டு சந்தா-120

## ஆண்டு சந்தா படிவம்




பெயர் :..............................

முகவரி :..............................

..............................

..............................

மாநிலம் :..............................

தொலைபேசி :..............................

கைபேசி :..............................

மின்னஞ்சல் :..............................

காசோலை & டி.டி. விவரம்:

எண் :..............................

வங்கி :..............................தேதி..............................

தொகை :..............................

**அனுப்ப வேண்டிய முகவரி :**

மித்ரா டைம்ஸ் மாத இதழ்

#602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு,

சென்னை-600 094. போன்:044-23744662, 23743007.

# அதிக வெயிலில் உடலின் உஷ்ணம் குறைய சில வழிமுறைகள்

* இளநீர் குடிக்க வேண்டும்.
* கார, மசாலா உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.
* பொரித்த, கொழுப்பு நிறைந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.
* உப்பு குறைவாக எடுத்துக்கொள்ள வேண்டும்.
* வாழைப்பழம், வெள்ளரி, கரும்புச்சாறு மூன்றுமே நன்மை பயக்கும்.
* ஆலிவ் எண்ணெயில் சமைக்கலாம்.
* காய்கறி உணவு சிறந்தது.
* ஒரு பேசினில் நீர் பிடித்து பாதங்களை அதில் சிறிதுநேரம் அமிழ்த்தி வைக்கலாம்.
* வெந்தயம் ஊற வைத்து தினம் ஒரு டீஸ்பூன் எடுத்துக் கொள்ளலாம்.
* சந்தனம், பன்னீர் கலந்து உடலில் தடவலாம்.
* ஒரு டீஸ்பூன் வெண்ணையை பாலில் கலந்து அருந்தலாம்.
* பழங்கள் உண்பது உடல் சூட்டினைத் தணியச் செய்யும்.
* ஏலக்காய் டீ, பால் சிறந்தது.
* மோர் சூட்டை நன்கு தணிக்கும்.
* 92 சதவீதம் நீரும், வைட்டமின் 'சி' சத்தும் கொண்ட தர்பூசணி பழம் உடல் சூட்டினை நன்கு தணிக்கும்.
* வெள்ளரிக்காயினை அடிக்கடி தினமும் சாப்பிடுங்கள் அல்லது தோல் சீவி ஜூஸ் செய்து குடியுங்கள்.
* புதினா சாறு, மோருடன் கலந்து பருகுவது உடனே சூடு தணியும்.
* முள்ளங்கி சூட்டை தணிக்கும். எதிர்ப்பு சக்தியினைத் தரும். வைட்டமின் 'சி' சத்து நிறைந்தது. வீக்கங்கள் குறைக்கவல்லது.
* எள் உண்பதும், நல்லெண்ணை உடலில் தேய்ப்பதும் உடலை குளிர்ச்சியாக வைக்கும்.
* சோம்பு ஊற வைத்த நீர் உடலுக்கும், குடலுக்கும் நன்மை பயக்கும்.
* குளிர்ந்த பாலில் தேன் கலந்து காலை வெறும் வயிற்றில் அருந்த சூடு தணியும்.
* பாதாம் பிஸின் சிறிது, இரவில் நீரில் ஊற வைத்து காலை பாலுடன் கலந்து பருக சூடு தணியும்.
* சாதாரண நீர் குடிப்பது உடலை குளிரச் செய்யும்.
* துளசி விதைகளை நீரில் ஊறச் செய்து குடிப்பது, உடல் சூட்டைத் தணிக்கும்.
* தனியா, சீரகம், சோம்பு இவற்றினை பொடித்து நீரில் இட்டு கொதிக்க வைத்து வடிகட்டி குடிக்க உஷ்ணம் குறையும்.
* தேங்காய் எண்ணை உடலில் தேய்த்துக் குளிக்க சூடு தணியும்.
* கொழுப்பற்ற தயிர் தினமும் உட்கொள்ளுங்கள்.
* மனதினை அமைதியாய் வைத்திருப்பதும், யோகா செய்வதும் உடல் சூட்டினைத் தணிக்கும்.
* தினம் ஒரு டம்ளர் நெல்லி சாற்றினை அருந்தலாம்.
* தினமும் ஒரு டம்ளர் எலுமிச்சை சாறு அருந்தலாம்.

இவற்றை கடைபிடிப்போம் , சூட்டினால் வரும் நோய்களைத் தவிர்த்து மகிழ்ச்சியாக வாழ்வோம்






# கணினி வேகத்தை அதிகரிக்க பென் டிரைவ் போதும்.!!

கம்ப்யூட்டர் வேகமும், நம்ம ஊர் வானிலையும் ஒன்னு தான், கணிக்கவே முடியாது. நேரம் இருக்கும் போது விளையாட அதிக வேகத்தில் இயங்கி நம்மையே அதிசயிக்க வைக்கும். இதுவே அவசரமாக ஏதேனும் செய்ய நினைத்து கம்ப்யூட்டரை திறந்தால் ஆமையை விட மெதுவாக இயங்கி வெறுப்பேற்றும். காரணம் இல்லாமல் கம்ப்யூட்டர் வேகம் குறையும் போது, வைரஸ் ஸ்கேன், ரீஸ்டார்ட் போன்ற பலவற்றை முயற்சித்திருப்பீர்கள். வழக்கமான முறைகளில் பலன் இல்லாத போது கம்ப்யூட்டரின் ரேம் அளவினை அதிகரிக்கலாம். உடனே பல ஆயிரங்களை செலவு செய்யனுமேனு டெரர் ஆகாதீங்க. குறைந்த செலவில் ரேம் செய்ய பென் டிரைம் மட்டும்போதும்!!

பென் டிரைவ் : கம்ப்யூட்டரின் ரேம் அளவினை பென் டிரைவ் கொண்டு அதிகரிப்பது எப்படி என்பதை இங்கு தெரிந்து கொள்ளுங்கள்..

ஆட்டோ ப்ளே : கம்ப்யூட்டரில் யுஎஸ்பி பென் டிரைவ் நுழைத்ததும் ஆட்டோ ப்ளே எனேபிள் செய்திருத்தல் அவசியம் ஆகும்.

வேகம் : இவ்வாறு ஆட்டோ ப்ளே எனேபிள் செய்யப்பட்டிருக்கும் போது மெனுவில் கணினியின் வேகத்தைஅதிகப் படுத்த கோரும் "Speed Up My

System" என்ற வாசகத்தை திரையில் பார்க்க முடியும். இதை கொண்டு ரெடி பூஸ்ட் செய்ய முடியும்.

டேப் அடுத்து கணினியின் திரையில் இருக்கும் "ReadyBoost" என்ற டேபினை க்ளிக் செய்ய வேண்டும். முழு பென் டிரைவினையும் ரேம் அதிகரிக்க பயன்படுத்த வேண்டும் எனில் "Dedicate this device to Ready Boost" என்ற ஆப்ஷனை க்ளிக் செய்ய வேண்டும்.

அளவு ஒரு வேலை குறைந்த அளவு மெமரியை மட்டும் பயன்படுத்த வேண்டுமெனில் "Use this device" என்ற ஆப்ஷனை க்ளிக் செய்து தேவையான மெமரி அளவினை தேர்வு செய்து "ஓகே" என்ற பட்டனை க்ளிக் செய்யலாம்.

ரெடி பூஸ்ட் அடுத்து drive letter ஆப்ஷனை ரைட் க்ளிக் செய்து properties ஆப்ஷனில் ReadyBoost டேபினை தேர்வு செய்ய வேண்டும்.

ஆப்ஷன் பின் பென் டிரைவினை ரேம் போன்று இயக்கும் ஆப்ஷனை கண்டறிந்து உங்களின் கம்ப்யூட்டருக்கு ஏற்ற அளவு ரேம் குறிப்பிட வேண்டும்.

ஓவியம் வரைந்தவர்



**எஸ்.சுருதிலக்ஷ்மி**

**XI Std**

VIDYAA VIKAS MATRICULATION HIGHER SECONDARY SCHOOL KARAMADAI,



# விவசாயப் பறவை

பார்ப்பதற்கு ஆந்தை போல் இருக்கும் இந்த பறவை, ஆந்தை அல்ல. இதன் பெயர் செம்பழுப்பு தவளைவாய்ப் பறவை. நமக்கு எதிரே இருக்கும் மரத்தில் இந்த பறவை அமர்ந்திருந்தாலும் இதை நம்மால் காண முடியாது. சூழலுக்கு ஏற்ப தன்னை மறைத்துக் கொள்வதில் கில்லாடி.

உலகம் முழுவதும் மூன்று வகையான தவளைவாய்ப் பறவை இனம் இருக்கிறது. அவை: செம்பழுப்பு தவளைவாய்ப் பறவை, புள்ளித்தீற்றல் தவளைவாய்ப் பறவை, பப்புவன் தவளைவாய்ப் பறவை ஆகியவையாகும். இவற்றில் வெள்ளை சாம்பல் நிறத்தில் உடலில் ஆங்காங்கே கருநிற கோடுகளுடன் அடிப்பகுதியும், செம்பழுப்பு நிறத்தில் கருமை நிற புள்ளிகளும் கொண்ட செம்பழுப்பு தவளைவாய்ப் பறவை தனது விசித்திர நிறக் கலவையால் மரங்களில் அமர்ந்திருந்தாலும் பார்வைக்கு புலப்படாது. நல்ல மதிய வெயிலில் கூட மரத்தின் தாழ்வான கிளையில் அசைவற்று அமர்ந்திருக்கும்.

இவை அடர்ந்த காடுகளில் வசிப்பதில்லை. தோப்புகள், புதர்கள். மனிதர்கள் நடமாடும் பூங்காக்கள் போன்ற இடங்களில் பயமின்றி வசிக்கின்றன. இதுவொரு இரவு நேர வேட்டையாளி. பகலில் மரக்கிளையில் அசையாமல் அமர்ந்திருக்கும் இவற்றின் வாய்க்கருகில் பறந்து வரும் பூச்சிகளை மட்டும் உண்ணும்.



இரவில் வேட்டை யாடுவதில் படு கில்லாடிகள். குருத்து வண்டுகள், வெட்டுக் கிளிகள், தத்துக்கிளிகள், மரவண்டுகள் போன்ற பயிர்களை அழிக்கும் பூச்சிகள் அனைத்தையும் உணவாக உட்கொள்ளும். அதனால் இது விவசாயத்துக்கு தோழன். மேலும் எலி, அந்துப்பூச்சி, வண்டு, புழுக்கள், நத்தை, சிலந்தி, குளவி, மரவட்டை, பூரான், தேள், பல்லி, தவளைகள் போன்றவையும் செம்பழுப்பு தவளைவாய்ப் பறவையின் வாய்க்குத் தப்புவதில்லை. இதனால் இதை சுற்றுச் சூழலுக்கு உகந்த பறவை என்கிறார்கள், ஆய்வாளர்கள்.

இந்தப் பறவைகள் பெரும்பாலும் ஜோடியாகவே காணப்படும். ஆண் பறவை தனது ஜோடியின் இறகுகளை அடிக்கடி அலகால் கோதி அன்பை வெளிப்படுத்தும். ஒருமுறை இணை சேர்ந்த ஜோடி வாழ்நாள் முழுவதும் பிரிவதில்லை. வருடா வருடம் ஒரே இடத்தில் கூடு கட்டும். இவற்றின் கூடுகள் மிகவும் பலவீனமானவை. மரக்கிளை களில் கூடு கட்டிக் கொள்ளும். பெரும் மழைக்கும், கொஞ்சம் வேகமான காற்றுக்கும் கூட தாங்காது, இவற்றின் கூடுகள். பெண் பறவை இரண்டு அல்லது மூன்று வெள்ளை நிற முட்டைகளை இடும். ஆண், பெண் இரண்டுமே மாற்றி மாற்றி அடை காக்கும். அடைகாக்கும் பறவைக்கு மற்ற பறவை இரை கொண்டு வந்து ஊட்டும். ஒரு மாதத்தில் குஞ்சுகள் பொரிக்கும். தாய் தந்தை இணைந்தே குஞ்சுகளுக்கு உணவு ஊட்டும்.

ஒரு மாதம் கழித்து குஞ்சுகள் பறக்கத் தொடங்கும். இந்தக் காலக்கட்டத்தில் குடும்பம் மொத்தமும் மரக்கிளையில் வரிசையாக ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டு அமர்ந்திருப்பது அழகாக இருக்கும். கழுத்தை உள்ளிழுத்து கண்களை மூடிக் கொண்டு விறைப்புடன் அமர்ந்திருப்பதைப் பார்த்தால் காய்ந்த மரக்கட்டை போலவே காட்சியளிக்கும்.

இவை விதவிதமான ஒலியை எழுப்பக கூடியவை. காதல் அழைப்பு, எல்லை அறிவிப்பு, இரைக்கான ஒலி, எதிரிகளை எச்சரிக்க என்று பலவித ஒலிகளை வைத்திருக்கின்றன.

காதல் மொழிகளை தாழ்ந்த ஒலியிலும், எச்சரிக்கை ஒலிகளை உரத்த குரலில் பல கி.மீ. தூரம் வரை கேட்கும் அளவிற்கும் எழுப்பக்கூடியவை. இரவில் இவை எழுப்பும் ஒலியை அபசகுனமாக நினைத்து இந்த பறவைகளை கிராமத்தினர் துரத்தி விடுகிறார்கள். உண்மையில் இது விவசாயத்தைக் காக்கும் பறவை.

## மிக எளிமையான பதினொரு பரிகாரங்கள்

1. காகத்திற்கு உணவிடுதல்.
2. பறவைகளுக்கு தாகம் தீர்க்க மாடியில் நீர் வைத்தல்.
3. பசுவிற்கு அகத்திகீரை, பச்சரிசி வெல்லம் தருதல்.
4. எறும்பு உண்ண பச்சரிசி மாவில் கோலமிடுதல்.
5. சனிக்கிழமை ஊனமுற்றவர்களுக்கு மற்றும் ஏழைகளுக்கு உணவு,உடை வழங்குதல்.
6. மீன்களுக்கு பொரி அளித்தல்.
7. மலை மேல் உள்ள கோவில்களில் உள்ள குரங்குகளுக்கு வாழைப் பழம் தருதல்.
8. கோயில் விளக்கிற்கு எண்ணை அளித்தல்.
9. ஊனமுற்றவர்களுக்கு உணவு, உடை வழங்குதல்.
10. அரசமரத்திற்கு நீர் ஊற்றுதல்.
11. அன்னதானம், நீர்ப்பந்தல் போன்றவற்றிற்கு உதவுதல்



# நிரந்திரம் என்பது எதுமில்லை

அவன் வியாபார நிமித்தமாக வெளியூர் சென்று திரும்பிய போது அவனது அழகான பெரிய பண்ணை வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. அந்த ஊரிலேயே மிகவும் அழகான வீடு அவனுடையது தான். அந்த வீட்டை இரண்டு மடங்கு விலை கொடுத்து வாங்க பலரும் தயாராக இருந்தனர். ஆனால் இவன் விற்கவில்லை. இப்போது அந்த வீடு அவன் கண் முன்னே எரிந்துகொண்டிருந்தது. ஆயிரம் நபர்கள் சுற்றி நின்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள். தீ முழுவதுமாக பரவிவிட்டதால் அதை அனைத்தும் பிரயோஜனம் இல்லை என்று எந்த முயற்சியும் எடுக்கவில்லை. வணிகனோ செய்வதறியாமல் கண்ணில் நீரோடு புலம்பிகொண்டிருந்தான். ஐயோ என் வீடு..!!! என் வீடு...!! என்று அலறினான்.

அப்போது அவனின் மூத்த மகன் ஓடிவந்து ஒரு விஷயத்தை சொல்கிறான் “தந்தையே ஏன் அழுகிறீர்கள்? இந்த வீட்டை நான் நேற்றே மூன்று மடங்கு லாபத்திற்கு விற்றுவிட்டேன். இதனால் நமக்கு நஷ்டம் இல்லை “ என்று கூறினான். இதை கேட்ட வணிகனுக்கு ஏக மகிழ்ச்சி. அவனது சோகம் அனைத்தும் மறைந்து மகிழ்ச்சி உண்டானது. இப்போது வணிகனும் கூடி இருந்த கூட்டத்தில் ஒருவனாக நின்று வேடிக்கை பார்க்க தொடங்கினான். அதே வீடு தான், அதே நெருப்பு தான் ஆனால் சில வினாடிகளுக்கு முன் இருந்த தவிப்பும் சோகமும் இப்போது அவனிடம் இல்லை.

சிறிது நேரத்தில் வணிகனின் இரண்டாவது மகன் ஓடி வந்து “தந்தையே ஏன் இப்படி கவலையில்லாமல் சிரிக்கிறீர்கள்? நாங்கள் விற்ற இந்த வீட்டிற்க்கு முன்பணம் மட்டுமே வாங்கியுள்ளோம். முழு தொகை இன்னும் வரவில்லை. வீட்டை வாங்கியவன் இப்போது மீதி பணத்தை தருவானா என்பது சந்தேகமே“ என்றான். இதை கேட்ட வணிகன் அதிர்ச்சி அடைந்தான். மீண்டும் சோகத்தில் ஆழ்ந்தான். கண்ணீரோடு மீண்டும் புலம்ப ஆரம்பித்தான். தனது உடமை எரிகிறதே என்ற எண்ணம் மீண்டும் அவனை வாட்டியது.

சில மணித்துளிகள் பின்பு வணிகனின் மூன்றாவது மகன் ஓடி வருகிறான். “தந்தையே கவலை வேண்டாம். இந்த வீட்டை வாங்கிய மனிதன் மிகவும் நல்லவன் போலும். இந்த வீட்டை வாங்க அவன் முடிவு செய்தபோது வீடு தீ பிடிக்கும் என்று உங்களுக்கும் தெரியாது எனக்கும் தெரியாது. ஆகையால் நான் பேசியபடி முழு தொகையை கொடுப்பது தான் நியாயம் என்று என்னிடம் இப்போது தான் சொல்லி அனுப்பினான்“ என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தான். இதை கேட்ட வணிகனுக்கோ ஏக சந்தோஷம். கடவுளுக்கு நன்றி சொல்லி ஆடிப்பாடி மகிழ்ந்தான். கண்ணீரும் சோகமும் மீண்டும் காணாமல் போய்விட்டது. மீண்டும் கூட்டத்தில் ஒருவனாக நின்று வேடிக்கை பார்க்க தொடங்கினான்.

இங்கு எதுவுமே மாறவில்லை. அதே வீடு, அதே நெருப்பு, அதே இழப்பு. இது என்னுடையது என்று நினைக்கும் போது அந்த இழப்பு உங்களை சோகத்தில் ஆழ்த்துகிறது. இது என்னுடையது அல்ல என்று நினைக்கும் போது உங்களை சோகம் தாக்குவது இல்லை. நான், என்னுடையது, எனக்கு சொந்தமானது என்ற எண்ணம் தான் பற்று. உலகில் எதுவுமே நிரந்தரமானது இல்லை. ஒருவனுக்கு மட்டுமே சொந்தமானது இல்லை. அனைத்துமே அழிய கூடியது. நான் உட்பட எல்லாமே ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின் அழியக்கூடியது அல்லது வேறு ஒருவனுக்கு சொந்தமாக கூடியது என்பதை நாம் நினைவில் நிறுத்தினாலே போதும். அந்த எண்ணமே பற்றற்ற நிலை.

# கேள்விகள் இங்கே! விடைகள்?



கல்லில் வடித்த காவியம் என்று அழைக்கப்படுவது?

| | | | | |
|---|---|---|---|---|
| மோ | | | | தி |

இந்தியாவில் ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட முதல் கோட்டை?

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செ | | | ன் | | ஜா | | | | | டை |

சூரியக்கடவுக்கான கோவில் உள்ள இடம்?

| | | | |
|---|---|---|---|
| கொ | | | க் |

அமிர்தசரஸில் உள்ள பொற்கோவில் யாரால் கட்டப்பட்டது?

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கு | | ஹ | | | | ந் | |

டில்லியிலுள்ள செங்கோட்டையை கட்டியவர் யார்?

| | | | |
|---|---|---|---|
| ஷா | | | ன் |

**சரியான விடைகளை 20.07.2016-க்குள் அனுப்பி வைக்க வேண்டும். குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று சிறுவர்களுக்கு பரிசுகள் காத்திருக்கிறது.**

அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்
**மித்ராடைம்ஸ்**
#501, சுருதிபிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை-600 094
போன் : 044-23744661,23743007/8

**M.S.மூர்த்தி**



கருணாநிதியிடம் இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்!

1924ம் ஆண்டு ஜூன் மாதம் 3ம் தேதி திருவாரூர் மாவட்டம் திருக்குவளையில் முத்துவேல் அஞ்சுகம் இணையருக்கு மகனாக பிறந்தவர் கருணாநிதி. 92 முடிந்து 93வது வயதில் கருணாநிதியிடம் அவரது அரசியல் வரலாற்றிலிருந்து சில பாடங்களை இன்றைய இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

வெற்றிக்கான யுத்தி

1962ல் துவங்கி 1967, 69, 71, 77, 80, 89, 1991, 96, 2001, 2006, 2011 மற்றும் 2016 என 13 முறை எம்.எல்.ஏ.வாக நின்று வெற்றி பெற்றவர் கருணாநிதி. இதில் குறிப்பிடத் தக்க சிறப்பம்சம் போட்டியிட்டு ஒருமுறை கூட அவர் தோற்றதில்லை. இதற்கு காரணம் அவரது கடின உழைப்பும், மக்கள் அவரை ஏற்றுக்கொள்ளுமாறு செய்யும் அவரது பிரச்சாரமும் தான்.

அயராத உழைப்பு

தள்ளாத வயதிலும், தளராத உழைப்பிலும் அவருக்கு 80 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் ஒரு தனி இடம் கிடைத்திருக்கிறது. இன்றைக்கும் 93வது வயதிலும் அதிகாலை 4 மணிக்கு விழித்துக் கொள்வார். யோகா செய்வாராம். கட்சி அலுவலகத்திற்கு தினந்தோறும் தவறாமல் வருகிறார். அன்றாட அரசியலை கட்சி நிர்வாகி களோடு விவாதிக்கிறார். கிரிக்கெட் முதல் உலக செய்திகள்வரை அனைத்தையும் பத்திரிகைகளில் படித்துவிடுகிறார். முரசொலியில் வெளியாகும் ஒவ்வொரு செய்தியும், அவர் பார்த்த பின்பு தான் அச்சிற்கு போகும்.

தொண்டர்களுடன் பிணைப்பு

கருணாநிதியின் வெற்றிக்கு முக்கிய காரணம் அவருடைய தொண்டர் களுடன் அவருக்குள்ள பிணைப்பு தான். குறிப்பாக கலைஞர் கடிதம் என்ற பகுதி முரசொலியில் அன்றாடம் அரசியலில் தன்னுடைய கட்சியின் நிலையை தொண்டர்களுக்கு தெளிவாக தெரிய வைப்பார். பி.ஜே.பி.யை பண்டாரக் கட்சி என்று எழுதினாலும் தொண்டர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அவரே பி.ஜே.பி .யுடன் கூட்டணி வைத்தபோது அதற்கான காரணங்களையும் கடிதம் வாயிலாக விளக்கியபோது அதையும் தொண்டர்கள் ஏற்றுக்கொண்டனர். காங்கிரசுடன் கூட்டணி வைத்தபோது நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சி தருக என்றார். பின்னர் சோனியா காந்தியோடு கூட்டணி வைத்தபோது இந்திராவின் மருமகளே வருக! இந்தியாவை காப்பாற்ற வருக! என்றார். காங்கிரசுடன் கூட்டணி இல்லை என்றபோது அதற்காக அவர் சொன்ன காரணத்தையும் தொண்டர்கள் ஏற்றுக்கொண்டனர்.

நகைச்சுவை உணர்வு

அரசியல் தணலில் ஏற்படும் தாக்கம், அடுத்த அடிக்கு சில தலைவர்களை நகர்த்த விடாது. ஆனால், கருணாநிதி எப்போதும் நகைச்சுவை உணர்வோடு இருப்பவர் என்பதால் அவர் அரசியல் தணலை அவ்வப்போது தணித்துக் கொள்வார். உதாரணத்திற்கு.....

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ: நாமக்கல் ஆஞ்சனேயருக்கு அசையும் சொத்து எவ்வளவு? அசையா சொத்து எவ்வளவு?

முதலமைச்சர் கருணாநிதி: அசையும் சொத்து அங்கு வந்து செல்லும் பக்தர்கள். அசையா சொத்து அங்கேயே இருக்கும் ஆஞ்சநேயர்.

சோதனைகளைத் தாங்கும் பக்குவம்

1976 நெருக்கடி நிலை அமல் படுத்தப் பட்டு மிசாவில் தி.மு.க.வினர் சிறையில் அடைக்கப்பட்டனர். கருணாநிதி மகன் ஸ்டாலின், முரசொலி மாறன் என 500க்கும் மேற்பட்டோர் ஓராண்டுக்கு சிறை வைக்கப்பட்டனர். 'கட்சி அவ்வளவு தான்' என்று எல்லோரும் நினைக்கும் போது கட்சியை தூக்கி நிறுத்தனர்.

1991ல் ராஜீவ் காந்தி மரணத்தால் 2 சீட்டுகள் மட்டுமே கிடைத்தபோது இனி கட்சி தலை தூக்காது என்றார்கள். ஆனால், 25 ஆண்டுகளுக்குப்பிறகு 89 சீட்டுகளுடன் வலுவான எதிர்க்கட்சியாக தி.மு.க. அமர்ந்துள்ளது.

இப்படி, அரசின் நெருக்கடி, அரசியல் நெருக்கடி, குடும்ப நெருக்கடி ஆகியவற்றுக்கு மத்தியில் இன்றும் தமிழக அரசியலில் தாக்குப்பிடிக்கும் கருணாநிதியின் வரலாறு இளைஞர் களுக்கு ஒரு பாடம்


**மித்ரா டைம்ஸ்** மாத இதழ்

**விளம்பரக் கட்டணம்.**

| | | |
|---|---|---|
| பின் அட்டை கலர் | - | ரூ. 15,000 |
| உள் அட்டை கலர் | - | ரூ. 10,000 |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 7,000 |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 3,500 |
| கால் பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 2,000 |

தொடர்புக்கு

044-23743007
044-23744662

*# 602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ,*
*9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 600 094.*

# சினிமா

## ஹீரோவான 'பசங்க' ஸ்ரீராம்



'பசங்க' படத்தில் சிறுவனாகவும் 'கோலி சோடா' படத்தில் சற்று வளர்ந்த பையனாகவும் நடித்த ஸ்ரீராம், இப்போது 'பைசா' படத்தில் ஹீரோ ஆகியிருக்கிறார். 'இது 'தமிழன்' படத்தை இயக்கிய மஜீத் இயக்கும் படம். சென்னையில் குப்பைப் பொறுக்குபவன் பற்றிய கதையை கொண்ட படம்.

## இயக்குனர் கண்டிஷனால் குண்டாகிறார் தமன்னா



இயக்குனர் விஜய் இயக்கும் 'அபிநேத்ரி' தமிழ் படத்தில் நடிக்கிறார் தமன்னா. அந்த கதாபாத்திரத்துக்காக இப்படியொரு கண்டிஷன் போட்டிருக் கிறார். 'பாகுபலி' யில் கத்தி சண்டை காட்சியில் நடிக்க வேண்டும் என்று இயக்குனர் ராஜமவுலி கூறியதும் வரிந்து கட்டிக் கொண்டு சண்டை பயிற்சி எடுத்த தமன்னா இயக்குனர் விஜய்யின் பேச்சையும் தட்டாமல் ஏற்றுக் கொண்டிருக் கிறார்

## இனிமேல் திருமணம் பற்றி பேசாதீர்கள்!' சமந்தா



தமிழில் விஜய்யுடன் நடித்த 'தெறி', சூர்யாவுடன் நடித்த '24' ஆகிய படங்களோடு தெலுங்கில் மகேஷ்பாபுவுடன் நடித்த 'பிரம்மோற் சவம்' என ஒரே நேரத்தில் அவர் நடித்த 3 படங்கள் தியேட்டர்களில் தற்போது ஓடிக்கொண்டிருக் கின்றன. இளம் நடிகர் ஒருவரை சமந்தா காதலிப்பதாகவும், விரைவில் இருவருக்கும் திருமணம் நடைபெறவிருப்பதாகவும் தெலுங்கு, தமிழ் இணையதளங்களில் காட்டுத்தீ போல் செய்தி பரவியது.

இதுகுறித்து ட்வீட் செய்துள்ள சமந்தா, "நானே வாய் திறந்து சொல்லும்வரை எனது திருமணம் பற்றி தயவு செய்து பேசாதீர்கள். நன்றி!'' என குறிப்பிட்டிருக்கிறார்.

## நட்பு வட்டத்திலிருந்து விலகி நிற்கும் அனிரூத்



தனுஷ், சிம்பு. சிவகார்த்திகேயன் போன்றவர் களுடன் நெருக்கமான நட்பிலிருக்கிறார் அனிரூத். சில மாதங்களுக்கு முன் பீப் பாடல் சர்ச்சையில் சிக்கினார். அவர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்தனர். வேகமாக வளர்ந்து வந்த அனிரூத்துக்கு இந்த விவகாரம் பின்னடைவை ஏற்படுத்தி இருக்கிறது. அவருக்கு நெருக்கமானவர்கள் சிலர் தந்த அட்வைஸ்படி தற்போது தனிமையில் இனிமை காணத் தொடங்கி இருக்கிறாராம்.

## கீர்த்தி சுரேஷின் டபுள் ட்ரீட்



ரஜினி முருகன்' மூலம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்த கீர்த்தி சுரேஷ் தற்போது 'தொடரி', 'பாம்பு சட்டை', 'ரெமோ', 'விஜய் 60' ஆகிய படங்களில் பிசியாக நடித்து வருகிறார். இதில் தனுஷுடன் இணைந்து நடித்திருக்கும் 'தொடரி, சிவகார்த்தி கேயனுடன் நடித்து வரும் 'ரெமோ' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் மற்றும் தீம் மியூசிக் ஜூன் மாதம் 9ஆம் தேதி வெளியாகவிருக் கிறது. தான் நடிக்கும் இரண்டு படங்களின் பாடல்கள் மற்றும் ஃபர்ஸ்ட் லுக் வெளியாகி ரசிகர்களுக்கு டபுள் ட்ரீட்டாக அமையவிருப்பதால் மிக்க மகிழ்ச்சியில் இருக்கிறார் கீர்த்தி சுரேஷ்!.

- அத்திமரத்தின் வேர் இரண்டு தோலா (20 கிராம் எடுத்து எட்டு அவுன்ஸ் நீர்விட்டு நாலு அவுன்ஸாக காய்சிசி சாப்பிட்டு வந்தால் பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஏற்படும் அதிக உதிரப்போக்கு சரியாகும், மற்றும் உடல் கண் எரிச்சலும் நீங்கும்.

- சிவப்பு மந்தாரைப் பூ மொக்குகளைக் கொண்டு வந்து நசுக்கி இரண்டு குவளை நீர் கலந்து காய்ச்சி ஒரு குவளையாக்கிக் காலை, மாலை என இருவேளை குடித்து வந்தால் பெண்களை வருத்தும் பெரும்பாடு என்னும் பிணி அகலும்.

- மாம்பருப்பினைத் தூள் செய்து ஒரு தேக்கரண்டி தூளுடன் ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்து குழைத்து உண்டுவர மாதவிலக்கு காலத்தில் ஏற்படும் அதிக உதிரப்போக்கு கட்டுப்படும்.


- நாவல் மரப்பட்டையையும் மாமரப்பட்டையையும் சம அளவு போட்டு நன்றாகக் கொதிக்க வைத்து கஷாயமிட்டு இரண்டு மூன்று நாட்கள் குடித்தால் எவ்விதமான இரத்தப்போக்கும் குணமாகும்.

- நாவல் மரப்பட்டையையும் மாமரப்பட்டையையும் சம அளவு போட்டு நன்றாகக் கொதிக்க வைத்து கஷாயமிட்டு இரண்டு மூன்று நாட்கள் குடித்தால் எவ்விதமான இரத்தப்போக்கும் குணமாகும்.

- பேரீச்சம்பழமும் தேனும் கலந்து சாப்பிடுவதால் பெண்களின் அதிக அளவிலான மாதவிலக்கு இரத்தப்போக்கை கட்டுப்படுத்தும்.

- மொச்சைப் பயறு 250 கி.கி. எடுத்து அரை வேக்காடிட்டு மேல் தோல் போக்கி உள்பருப்பை பொடி செய்து நல்லெண்ணெய்யுடன் பிசறி மூன்று நாள் காலை மாலை இரு வேளை கொடுக்க பெரும்பாடு நீங்கும்.

- மாம்பருப்பு, பரங்கிச்சக்கை இவை இரண்டையும் சூரணித்து இதற்கு இரண்டு மடங்கு சர்க்கரை சேர்த்து பாகுக்காய்ச்சி மெழுகு பதமாகக் கிளறி காலை, மாலை இரு வேளை கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வர பெரும்பாடு போகும்.



# பெண்களின் உதிரப்போக்கு குணமாக

## எளிய மருந்துகள்

- செம்பருத்தி இலையும், பிஞ்சும் சேர்த்து இடித்துப் பிழிந்து சாறு 500 மி.லி. சமன் எலுமிச்சை சாறு, இலுப்பைப் பட்டைச் சாறு ஒரு லிட்டர் மூன்றையும் கலந்து காலை மாலை ஒரு அவுன்ஸ் வீதம் சாப்பிட்டு வர பெரும்பாடு குணமாகும்.

- சிவந்த புதுச் செங்கல்லைப் பொடித்து வஸ்திரகாயம் செய்து சமன் சர்க்கரை கலந்து வெருகடி அளவு காலை, மாலை ஐந்து நாட்கள் சாப்பிட பெரும்பாடு குணமாகும்.

- மாங்கொட்டையைச் சுட்டு உள்ளே உள்ள பருப்பை எடுத்து மோரில் அரைத்து கொடுக்க பெரும்பாடு சீதபேதி, இரத்தபேதி, மூலச்சூடு, குடல் பூச்சிகள் நீங்கும்.

- வில்வ இலையை விழுதாக அரைத்துக் கொட்டைப் பாக்கு அளவு கொடுத்து குளிர் நீரில் முழுகி வரச் செய்ய பெரும்பாடு தீரும்.

- அத்தி, அசோகு, மா ஆகிய மரத்தின் பட்டைகளைச் சேர்த்துக் காய்ச்சிய குடிநீர்

காலை, மாலை குடித்துவர தீராத பெரும்பாடு தீரும்.

- மாசிக்காயைச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு அரை தேக்கரண்டி அளவு வாயில் போட்டு ஒரு டம்ளர் தண்ணீர் குடித்துவர மாதவிடாயின்போது ஏற்படும் அதிக இரத்தப்போக்கு நிற்கும்.

- மாம்பருப்பினைத் தூள் செய்து ஒரு தேக்கரண்டி தூளுடன் ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்து குழைத்து உண்டுவர மாதவிலக்கு காலத்தில் ஏற்படும் அதிக உதிரப்போக்கு கட்டுப்படும்.

- மாசிக்காயை கருகாமல் வறுத்துப் பொடித்து அரை முதல் ஒரு கிராம் வரை தேன் அல்லது நெய்யில் கொள்ள பெரும்பாடு, நீர்த்தக் கழிச்சல், மிகு வியர்வை ஆகியவை தீரும்.

- மாதுளை மரப்பட்டை 12 கிராம் எடுத்து 250 மில்லி தண்ணீரில் கொதிக்க வைத்து தினசரி காலையில் குடித்துவர மாதவிலக்கின்போது ஏற்படும் அதிகமான இரத்தப்போக்கு கட்டுப்படும்.

- தினமும் காலையில் செம்பருத்திப்பூ நான்கும் சிறிதளவு அருகம்புல்லும் சேர்த்து அரைத்து கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு பகலில் மோர் சாதம் இரவில் பால் சாதம் சாப்பிட ஒரே வாரத்தில் மாதர்களுக்கு ஏற்படும் பெரும்பாடு என்னும் தினமும் காணும் மாதவிடாய் தீரும்.


- அரசமரப்பட்டையை பாலில் அரைத்துக் கொடுத்தால் பெண்களுக்கு அதிகமாகப் போகும் மாதவிடாய் துன்பம் நீங்கும்.

- வாழைப்பூவைச் சாறெடுத்து உடன் தயிர் கலந்து சாப்பிட பெரும்பாடு, இரத்த சீதபேதி ஆகியவை குணமாகும்.

- பூவரச மொட்டுக்களை அரைத்து மோரில் கலந்து கொடுக்க பெரும்பாடு தீரும்.

- பூங்காவி 10 கிராம், துளாக்கி வறுத்த படிகாரம் 10 கிராம் இரண்டையும் கலந்து கண்ணாடி பாட்டிலில் வைத்துக் கொண்டு காலை, மாலை வெறும் வயிற்றில் 2 கிராம் அளவுக்கு தேனில் குழைத்துச் சாப்பிட பெரும்பாடு நீங்கும்.

சுஜாதா



# காவல்துறையில்

## தற்கொலைகள் அதிகரிப்பது ஏன்

தமிழ்நாடு காவல்துறை பாரம்பரியம் மிக்கது. 150 ஆண்டுகளுக்கு மேல் நீண்டநெடிய வரலாறு கொண்டது. ஆங்கிலேயர் காலத்தில் என்றாலும் சரி, சுதந்திரம் அடைந்தபிறகு இன்றுவரை உள்ள காலகட்டங்கள் என்றாலும் சரி, தமிழகத்தின் பெருமையை பிரதிபலிக்கும் திறமையான, ஒழுக்கமான மற்றும் வலிமையான துறையாகவே செயல்பட்டுவருகிறது. ஸ்காட்லாந்து யார்ட் போலீசுக்கு நிகரான அளவில் எவ்வளவு சிக்கலான வழக்குகளையும் திறமைமிக்க புலனாய்வு மூலம் கண்டுபிடித்த பெருமை இந்த துறைக்கு உண்டு.

2012-ம் ஆண்டில் 58 காவல் துறையினர் தற்கொலை செய்திருக் கிறார்கள். 2013ருல் 31 பேர்களும், 2014ருல் 27 பேர்களும் தற்கொலை செய்திருக் கிறார்கள். கடந்த ஆண்டு என்.ஹரீஷ் என்ற ஐ.பி.எஸ். அதிகாரி, விஷ்ணுபிரியா என்ற பெண் போலீஸ் துணை சூப்பிரண்டு என்று தொடங்கி சமீபத்தில் தர்மபுரியை சேர்ந்த சையது பாஷா என்ற போலீஸ்காரர் வரை நிறையபேர் தற்கொலை செய்திருக் கிறார்கள்.


தமிழக காவல்துறையில் போலீஸ் டி.ஜி.பி.க்கள் தொடங்கி கீழ் மட்டத்திலுள்ள போலீஸ்காரர்கள் வரை 25 பதவிகள் இருக்கின்றன. இந்த 25 பதவிகளிலும் 1 லட்சத்து 21 ஆயிரத்து 168 பணியிடங்கள் இருக்கின்றன. இதில் 2 ஆயிரத்து 126 இன்ஸ்பெக்டர் பதவிகளும், 201 பெண்போலீஸ் இன்ஸ்பெக்டர் பதவிகளும், ஆயிரத்து 135 ஆயுதபோலீஸ் சப்ருஇன்ஸ்பெக்டர் பணியிடங்கள் மட்டுமே முழுமையாக நிரப்பப் பட்டுள்ளன. மற்ற பதவிகளில் எல்லாம் முழுமையாக நியமனங்கள் போடப் படாமல் காலியாக இருக்கிறது. துல்லியமாக சொல்லப்போனால் மொத்த பதவிகளில் 97 ஆயிரத்து 512 பதவிகளே நிரப்பப்பட்டுள்ளன. 23 ஆயிரத்து 656 பதவிகளில் நியமனங்கள் இல்லை. காலியாக இருக்கிறது. பதவிகள் காலியாகஇருப்பதால் பணிகள் குறைந்து விட்டன என்று அர்த்தம் இல்லை.





பணிச்சுமை அதிகரித்துக்கொண்டே போகிறநிலையில் இந்த 23 ஆயிரத்து 656 காலியிடங்களில் உள்ள பணிகளையும் பணியில் இருக்கும் 97 ஆயிரம் பேர்தான் சுமக்கவேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஆகவே பணிச்சுமையை குறைக்க வேண்டும் என்றால் தேர்ந்தெடுக்கப்பட இருக்கும் புதிய அரசு காலியிடங்களை நிரப்பி கூடுதலாக பணியிடங்களை உருவாக்கவேண்டும். 23 ஆயிரத்து 656 காலியிடங்களை நிரப்புவதன் மூலம் புதிதாக இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்க முடியும். அந்த வகையில் காலியிடங்களை நிரப்புவதோடு மட்டுமல்லாமல் பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப அனைத்து மட்டங்களிலும் குறிப்பாக போலீஸ்காரர்கள் பணியில் கூடுதல் இடங்களை உருவாக்க வேண்டும். காவல்துறையினரும் மனிதர்கள்தான். எந்திரங்களுக்கே ஓய்வு கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கும்போது காவல்துறையினருக்கும் போதிய ஓய்வு கொடுக்கவேண்டும். போலீஸ்காரர்களுக்கு அவ்வப்போது மனோதத்துவ கவுன்சிலிங் வழங்க வேண்டும்.





# வேலையில்லா திண்டாட்டத்துக்குக் காரணம்...

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து வைத்துவிட்டு கிட்டத்தட்ட 92 லட்சம் பேர் வேலை இல்லாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது. இதன் அடிப்படையை ஆராய்ந்து பார்த்தால், இவ்வளவு பேர் வேலையில்லாமல் இருப்பதற்கான காரணங்கள் புரிய வரும்.

சிலர் படித்த துறையை விட்டுவிட்டு வேறு வேலைகளுக்கு முயற்சிப்பது; தான் படிக்கும் துறைக்கான வேலைவாய்ப்புகள் என்னென்ன என்பதைத் தெரிந்து கொள்ளாமலேயே அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று எதாவது ஒரு துறையை தேர்வு செய்து, அதில் அதிக வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்ற எண்ணத்தில் படிப்பது; படித்து முடித்த பின்னர் எதிர்பார்த்ததுபோல் வேலை கிடைக்காமல், என்ன வேலைக்குச் செல்வது என்று தெரியாமல் விஸீத்துக் கொண்டிருப்பார்கள்.

அதேபோல், படித்து முடித்ததும் குடும்பச் சூழல் காரணமாக கிடைக்கின்ற ஏதாவது ஒரு வேலையில் சேர்ந்துவிட்டு, பின்னர் அந்த வேலை பிடிக்கவில்லை என திரும்பி வந்துவிடுவது போன்ற காரணங்களால் வாழ்க்கையை பாழாக்கிக் கொண்டிருக்கும் ஏராளமான இளைஞர்களை இன்று நாம் காண முடிகிறது.

தமிழகத்தில் ஆயிரக்கணக்கில் பொறியியல், தொழில்நுட்பம், கலை அறிவியல் உள்பட பல்வேறு கல்லூரிகள் உள்ளன. இந்தக் கல்லூரிகளில் படித்து முடித்து ஆண்டுதோறும் லட்சக்கணக் கான மாணவர்கள் வெளியில் வந்து கொண்டிருக்கின்றனர்.

இதில் பெரும்பாலான தனியார் பொறியியல், கலை அறிவியல் கல்லூரிகள், எங்கள் கல்லூரியில் கடந்த ஆண்டுகளில் படித்த இவ்வளவு மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம் என்று விளம்பரங்களை செய்து மாணவர்கள் சேர்க்கையை நடத்துகின்றன.

உண்மையில் அந்தக் கல்லூரிகள் இதுபோன்று வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனவா என்று ஆராய்ந்து பார்த்தால் நமக்கு ஏமாற்றமே மிஞ்சும்.

சில தனியார் கல்லூரிகளில் பிரபலமான மென்பொருள் நிறுவனங்கள் உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களின் வளாகத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இதில் பங்கேற்கும் மாணவர்கள் தேர்வில் வெற்றிபெற்றுவிட்டால், அவர்களது வாழ்க்கை பிரகாசமானதாகி விடும்.

அப்படியில்லாமல் தேர்வில் தோல்வியுறும் மாணவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்த பின்னர் அதேபோன்ற முன்னணி நிறுவனங்களில் வேலையில் சேர்வதென்பது குதிரைக் கொம்பாக இருக்கும்.

ஏனென்றால், கல்லூரியில் நடத்தப்படும் வளாகத் தேர்வின்போது, அந்த முன்னணி நிறுவங்கள் முதல்நிலை, பிரதான எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு என்ற அளவில் 2 அல்லது 3 சுற்றுகளை எளிமையான முறையில் வைத்து மாணவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்கின்றன.

ஆனால், கல்லூரிப் படிப்பை முடித்து, முன்னணி நிறுவனங்களுக்கு வேலை தேடிச் செல்லும் மாணவர்களுக்கு 4,5,6 சுற்றுகள் என்று தேர்வு நடத்தி, அவர்களை பெரும்பாலும் வேலைக்கு எடுக்காமல் அலைக்கழிக்கவே செய்கின்றன.

தற்போது சென்னை, மதுரை, திருச்சி, நெல்லை, கோவை உள்ளிட்ட தமிழகத்தில் உள்ள முக்கிய நகரங்களில் ஆண்டுதோறும் 12ஆம் வகுப்பு தேர்வு எழுதி முடிக்கும் மாணவர்களுக்கு தனியார் பொறியியல் கல்லூரிகள், நாளிதழ்களின் சார்பில் கல்வி விழிப்புணர்வு கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

ஆனால், இது பெரும்பாலும் பெரு நகரங்களில் நடத்தப்படுவதால், அந்த நகரைச் சுற்றியுள்ள மாணவர்களும், இந்த கண்காட்சி குறித்து தகவல் கிடைக்கும் மாணவர்களும் மட்டுமே பயனடைகின்றனர். பெரும்பாலான கிராமப்புற மாணவர்களுக்கு இது குறித்த விழிப்புணர்வு இல்லை.

மேலும், இந்தக் கண்காட்சியில் 12ஆம் வகுப்பு படித்து முடித்த பின்னர் என்ன துறையைத் தேர்வு செய்யலாம், எந்தத் துறையில் தற்போது வேலைவாய்ப்புகள் அதிகம் உள்ளன என்பது உள்ளிட்ட பல்வேறு சந்தேகங்களுக்கு விளக்கம் கிடைக்கலாம்.

ஆனால், ஒரு மாணவர் 10ஆம் வகுப்பில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் இந்த துறைகளைத்தான் தேர்வு செய்ய முடியும் என அப்போதே நிர்ணயிக்கப் பட்டு விடுகின்றன. பெரும்பாலும், 10ஆம் வகுப்பில் 500க்கு 450 மதிப்பெண்களுக்கு மேல் எடுக்கும் மாணவர்கள் கணிதப் பாடத்துடன் கூடிய முதல் பிரிவில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

இவர்கள் 12ஆம் வகுப்புக்குப் பின்னர் மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட துறைகளில் தேர்வு செய்து படிக்க முடியும்.

ஆனால், 450க்கு குறைவாக மதிப்பெண்கள் எடுத்து 11ஆம் வகுப்பில் 3ஆவது, 4ஆவது பிரிவுகளில் படிக்கும் மாணவர்கள் மேற்கூறிய துறைகளை தேர்ந்தெடுக்க முடிவதில்லை. ஒரு மாணவர் 10ஆம் வகுப்பில் சரியாக படிக்க வில்லை என்று வைத்துக் கொள்வோம், பிற்காலத்தில் அவர் நன்றாகப் படித்து ஒரு மருத்துவராகவோ அல்லது பொறியாளராகவோ வரமுடியாத சூழலை அவர் 10ஆம் வகுப்பில் எடுக்கும் மதிப்பெண் நிர்ணயித்துவிடுகிறது.

தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் அறிவிக்கப் படும் தேர்வுகளுக்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் சார்பில் இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. எனினும், அனைத்து மாவட்டங்களிலும் அரசுத் தேர்வுகளுக்கு பயிற்சி அளிக்க பல்வேறு தனியார் அமைப்புகள் மூலம் ரூ.5,000 முதல் ரூ.15,000 வரை வசூலிக்கப்படுகிறது.

எனவே, ஒரு மாணவர் தனக்கான துறையைத் தீர்மானிக்கும் வகையிலும், வேலைவாய்ப்புகளை தெரிந்துகொள்ளும் வகையிலும் அந்த மாணவருக்கு 10ஆம் வகுப்பு முன்னதாகவே அரசு சார்பில் கல்விக் கண்காட்சிகள் நடத்தப்பட வேண்டும்.

மாணவர்கள் பள்ளிப் படிப்பையோ அல்லது கல்லூரிப்படிப்பையோ முடித்தவுடன் அவர்கள் அரசு அல்லது தனியார் வேலைகளில் சேருவதற்கு வழிகாட்டும் விதமாகவும், அவர்கள் தனக்கான வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொள்ளவும், சுயதொழில் தொடங்கும் வகையிலும் பயிற்சி அளிப்பதை அரசு உறுதி செய்வதுடன், வங்கிக் கடன் பெறும் வழிமுறைகளுடன் கூடிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.






மேலும், அரசு, தனியார் வேலை வாய்ப்புகளுக்குத் தயாராகும் வகையில் 9 ஆம் வகுப்பு முதல் கல்லூரிப் படிப்பு வரையிலான காலங்களில் தேர்வுகள் மற்றும் நேர்முகத் தேர்வுகளை எதிர் கொள்வதற்கு மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகளை நடத்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.





# ஜூன் மாத பலன்கள்

## மேஷம்

சதாசுறுசுறுப்புடன் செயல்பட்டு வரும் உங்களுக்கு நற்பலன்கள் கிடைக்கும். ஆனால் எதிலும் நிதானத்தைக் கடை பிடிப்பது அவசியம். பேச்சில் கவனம் தேவை. அவசரப்பட்டு கொடுக்கும் வாக்குறுதிகள் தர்மசங்கடமான நிலையை தோற்றுவிக்கும். குடும்ப விவகாரங்களில் அமைதி காத்தால் அநாவசிய சச்சரவுகளை தவிர்க்கலாம். வரவு சிறக்கும். சேமிப்புகள் உயர்வடையும். நெடுநாளாக நிலுவையில் இருந்த பாக்கித்தொகை ஒன்று வசூலாகும். வாழ்க்கைத் துணையோடு கருத்து வேறுபாடு தோன்றி மறையும். நெருங்கிய நண்பர் ஒருவர் உங்களுக்கு எதிராகத் திரும்பக்கூடும். கொடுக்கல், வாங்கலைத் தவிர்க்க வேண்டியது அவசியம். தனலாபம் தரும் மாதம் இது.

**பரிகாரம்: ஐஸ்வர்யேஸ்வரரை வணங்கவும். பிரதோஷ நாளில் சிவாலயத்தில் அன்ன தானம் செய்யலாம்.**

## ரிஷபம்

அலைச்சல் அதிகரித்தாலும் நினைத்ததை சாதிப்பீர்கள். கவுரவம் உயரும். நினைக்கும் காரியங்கள் அனைத்தும் எப்படியாகிலும் நடந்தேறும். குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஆனந்தமான சூழல் திரும்பும். குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் தனி கவனம் செலுத்துவீர்கள். திடீர் தொலைதூரப் பிரயாணத்திற்கான வாய்ப்பு உண்டு. உறவினர் களுக்கிடையே சமரசம் செய்து வைக்க வேண்டிய சூழல் உருவாகலாம். பிள்ளைகளின் வாழ்வில் சுபநிகழ்வு நேரிடும். நெருங்கிய நண்பர் ஒருவருக்கு உதவப் போய் தர்மசங்கடமான சூழலுக்கு ஆளாகலாம். தொழில்முறையில் உங்களின் செயல் திட்டங்கள் வெற்றி காணும். வியாபாரிகளுக்கு தனலாபம் கிடைக்கும்.

**பரிகாரம்: பவுர்ணமியன்று மிட்டில் சத்ய நாராயண பூஜை செய்து அன்னதானம் செய்யவும்.**

## மிதுனம்

சாதக பாதகங்கள் கலந்திருக்கும். மனப்பக்குவம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும். செலவுகள் ஏற்படும். எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் பணியாற்றி வருவீர்கள். தைரியம், மன உறுதியால் உங்கள் கவுரவம் உயரும். குடும்பத்தில் அமைதியான சூழல் நிலவும். வரவை விட செலவு அதிகரித்து சேமிப்புகள் கரைவதற்கான வாய்ப்புகள் உண்டு. விவேகமான பேச்சால் மதிப்பு உயரும். உடன் பிறந்தோர் சாதகமாக செயல் படுவார்கள். உத்யோகஸ்தர் களுக்கு எதிர்பாராத இட மாற்றத்திற்கான வாய்ப்பு உண்டு. தடை களையும், இடைஞ்சல் களையும் மன உறுதியோடு எதிர்கொள்ளும் மாதம் இது.

**பரிகாரம்: புதன்கிழமை தோறும் பெருமாள் கோயிலுக்குச் சென்று வழிபட்டு வரவும்.**

## கடகம்

எண்ணங்கள் பூர்த்தியாகும். தேவைகள் நிறைவேறும். குடும்பத்தின் செயல்பாடுகளில் உங்களின் பங்கு முக்கியத்துவம் பெறும். சிறப்பான தன லாபம் இருக்கும். சுப செலவுகள் அதிகரிக்கும். உடன் பிறந்தோர் உதவிகரமாக செயல்படுவார்கள். தகவல் தொடர்பு சாதனங்கள் லாபம் தரும் வகையில் அமையும். உறவினர்களின் வருகை குடும்பத்தில் உற்சாகம் தரும். வாழ்க்கைத் துணை உங்கள் எண்ணத்திற்கேற்ப செயல் பட்டு வருவார். தொழிலில் தனித்துவத்தை நிலைநாட்டுவீர்கள். கலைத்துறையினர் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறுவர். நற்பலன்களை காணும் மாதம் இது.

**பரிகாரம்: வியாழன் தோறும் சாயிபாபா ஆலயத்தில் அன்னதானம் செய்து வாருங்கள்.**

## சிம்மம்

பணிச்சுமை அதிகரித்து ஓய்வின்றி செயல்பட வேண்டிய சூழல் உருவாகும். பொறுப்புகள் அதிகரிக்கும். தொடர்ந்து ஒரு செயலைச் செய்து முடித்தவுடன் புதிதாக மற்றொரு பொறுப்பு வந்து சேரும். செயல் வேகம் கூடும். குடும்பத்தில் அமைதி நிலவும். வரவு சிறப்பாக இருக்கும். சேமிப்பு கள் உயர்வடைய துவங்கும். தகவல் தொடர்பு சாதனங்கள் அலைச்சலை தவிர்க்கும். உடன் பிறந்தோர் உதவிகரமாய் செயல்படுவார்கள். பிள்ளைகளின் செயல்பாடுகள் அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும். தொழிலில் பிள்ளைகளின் ஆலோசனைகள் உங்களுக்கு பயன்தரும். வியாபாரிகள் சிறப்பான தனலாபம் காண்பார்கள். பொறுமையை கடைபிடித்து உண்மையான உழைப்பின் பலனை அடையும் மாதமாக இருக்கும்.

**பரிகாரம்: வெள்ளிதோறும் மாரி அம்மனை வழிபட்டு வாருங்கள்.**

## கன்னி

எண்ணிய காரியங்கள் நிறைவேறும். அவ்வப்போது மனம் அலைபாய்ந்தாலும்செயலாற்றும் போது ஸ்திரத் தன்மையோடு செயல்படுவீர்கள். குழப்பத்தை மறந்து செயல்படுவீர்கள். இறங்கிய காரியத்தில் வெற்றி கிடைக்கும் வரை ஓயாமல் உழைப்பீர்கள். சிறப்பான வரவு தொடரும். குடும்பத்தினர் ஒத்துழைப்பும் அவர்களால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிலவும். பேச்சில் நகைச்சுவை வெளிப்படும். உடன்பிறந்தோருடன் கருத்து வேறுபாடு தோன்றுவதற்கான வாய்ப்பு உண்டு. முன் பின் தெரியாத நபர்களை நம்பி ஏமாறும் வாய்ப்பு உண்டு என்பதால் எச்சரிக்கையுடன் பழகுவது அவசியம். உத்யோகஸ்தர்கள் தங்கள் பொறுப்புகளை செவ்வனே நிறைவேற்றி உயரதிகாரிகளிடம் நற் பெயர் வாங்குவர்.

**பரிகாரம்: குருபகவானுக்கு வியாழன் தோறும் விளக்கேற்றி வழிபட்டு வாருங்கள்**

## துலாம்

நினைப்பது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். எதிலும் அதிக கவனம் அவசியம். குறைந்த விலையுள்ள பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்குதல், பண விவகாரங்களில் ஏமாற்றப்படுதல் போன்ற நிகழ்வுகள் உண்டாகலாம். எந்த ஒரு விவகாரத்திலும் நிதானத்துடன் இறங்குவது நல்லது. பேச்சால் வீண் சச்சரவு வருவதை தடுக்க நிதானமாக பேசவும். குடும்பத்தில் சலசலப்பான சூழல் நிலவும். செலவுகளை சமாளிக்கின்ற வகையில் வரவுகள் தொடரும். உடன்பிறந்தோருடன் கருத்து வேறுபாடு தோன்றும். தகவல் தொடர்பு சாதனங்கள சமயத்திற்கு பயன்தராது போகும். வாழ்க்கைத்துணை உங்கள் பணிகளுக்கு பக்கபலமாகத் துணை நிற்பார். தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**பரிகாரம்: வியாழன் தோறும் கருடாழ்வார் சந்நதியில் விளக்கேற்றி வழிபட்டு வரவும்.**

## விருச்சிகம்

நற்பலன்களை எதிர்கொள்வீர்கள். நினைத்த காரியங்கள் எளிதாக முடியும். குடும்பத்தில் சந்தோஷமான சூழல் நிலவும். ஏதேனும் ஒரு வழியில் வரவு வந்து கொண்டிருக்கும். முக்கியமான பணிகளில் அடுத்தவர்களின் உதவி தேவைப்படும். நீங்கள் முன்பு செய்த உதவிக்கு பதிலாக சிலர் உங்கள் பணிகள் எளிதில் முடிய உதவி செய்வார்கள். அவர்களின் வாழ்வில் சுபநிகழ்வு களுக்கான ஏற்பாடுகளை செய்ய நேரிடும். இதுநாள் வரை திருமணத் தடை கண்டவர் களுக்கு வரன் தேடி வரும். குழந்தைப் பேறு இன்றி அவதிப்பட்டவர்கள் சந்தான ப்ராப்திக்கான அறிகுறிகளை காண்பார்கள். நண்பர்களால் நன்மை உண்டாகும் அதே நேரத்தில் செலவுகளும் அதிகரிக்கும். கூட்டுத்தொழில் செய்வோர் சிறப்பான தனலாபம் காண்பர்.

**பரிகாரம்: நாகாத்தம்மன் வழிபாடு நன்மையைத் தரும்.**



## தனுசு

உறுதியும், தன்னம்பிக்கையும் மிகுந்த வலிமை பெறும். மனப்பக்குவம் கூடும். முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். எளிதில் முடிந்துவிடும் பணிகள் கூட இழுபறி தரும். ஆயினும் தளராத தொடர்முயற்சியால் காரியத்தை சாதித்துக் கொள்வீர்கள். பேச்சில் கவனம் தேவை. குடும்பத்தில் சலசலப்பு நிலவும். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் நட்பு வட்டம் விரிவடையும். மாணவர்கள் உயர் கல்வியில் விரும்பிய பாடத்தில் இடம் பிடிப்பதில் இழுபறி உண்டாகலாம். பிள்ளைகளின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக புதிய திட்டம் ஒன்றினை வகுத்து செயல்படுவீர்கள். ரத்தக் கொதிப்பு நோய் உள்ளவர்கள் உடல் நிலையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். வாழ்க்கைத்துணை உங்கள் பணிகளுக்கு பக்கபலமாய் துணை நிற்பார்.

**பரிகாரம்: ஸ்ரீகிருஷ்ணரை வணங்கி வருவதோடு பகவத் கீதைபடித்து வாருங்கள்.**

## மகரம்

எதிலும் தைரியமாகச் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். திருமணத் தடை கண்டு வந்தவர்களுக்கு வரன் தேடி வரும். புதிய வீடு கட்டுவதற்காக காத்திருப்போருக்கு வங்கி கடனுதவி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். வரவு சீராக இருக்கும். பேச்சால் காரிய சாதனை உண்டு. உடன் பிறந்தோர் உதவிகரமாய் செயல்படுவார்கள். தகவல் தொடர்பு சாதனங்கள் உங்கள் பணிகளுக்குத் துணைநிற்கும். வாகன பராமரிப்பு செலவு அதிகரிக்கும். தாயார் வழி உறவினர் ஒருவர் உதவி கேட்டு உங்களை நாடி வருவார். பிள்ளைகளால் உங்கள் கவுரவம் உயரும். அவர்களது வாழ்வில் சுபநிகழ்வு களுக்கான வாய்ப்புகள் கூடி வரும். மாதம் இது.

**பரிகாரம்: செவ்வாய் தோறும் கந்த சஷ்டி கவசம் படித்து சுப்ரமணியரை வணங்கி வாருங்கள்.**

## கும்பம்

தடைகள் ஏதுமின்றி முன்னேற்றப் பாதையில் பயணிப்பீர்கள். எதிலும் உங்கள் முயற்சியே வெற்றி பெறும். புது சொத்துகள் வாங்கும் முயற்சி வெற்றி பெறும். பொருளாதார நிலை ஏறுமுகமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பேச்சால் கவுரவம், மதிப்பு உயரும். புது ஃபர்னிச்சர்கள் வாங்குவீர்கள். அவ்வப்போது பிரயாணம் செய்ய நேரும். பிள்ளைகளின் விவேகமான செயல்களை எண்ணி பெருமிதம் கொள்வீர்கள். விளையாட்டு, பொழுதுபோக்கு அம்சங்கள், கேளிக்கை, கொண்டாட்டத்தில் மனம் லயிக்கும். தொழில் போட்டிகள் விலகி வெற்றிநடை போடுவீர்கள். சுயதொழில் செய்வோர் சிறப்பான தனலாபம் காண்பர். மாணவர்கள் ஆசிரியர்களின் வழி காட்டுதல் படி புதியதொரு பாதையில் அடியெடுத்து வைப்பர். நற்பலன்களை அனுபவிக்கும் மாதம் இது.

**பரிகாரம்: அருணாச்சலேஸ்வரரை வழிபட்டு வாருங்கள்.**

## மீனம்

ஒவ்வொரு செயலிலும் போராடி வெற்றி காண வேண்டியிருக்கும். எளிதில் முடியும் என்று நினைத்த காரியங்களும் நீண்ட இழுபறி தரும். அரசாங்க பணிகள் தாமதமாகும். சதா ஏதோ ஒரு சிந்தனை மனதை ஆக்கிரமித்திருக்கும். நெருங்கிய உறவினர் ஒருவருடன் மனக்கசப்பு ஏற்படும். வாகனங்களை இயக்கும்போது அதிக கவனம் அவசியம். அநாவசிய பிரயாணத்தை தவிர்ப்பது நல்லது. வீட்டில் மாற்றம் செய்ய முயற்சிப்போர் சிறிது காலம் காத்திருப்பது அவசியம். இக்கட்டான சூழலில் வாழ்க்கைத்துணை உங்களுக்கு துணை நிற்பார். நண்பர்கள் உதவி செய்வார்கள். உத்யோகஸ்தர்கள் உடன் பணி செய்வோரை அனுசரித்துச் செல்வது நல்லது. பயத்தால் இரவில் நிம்மதியான உறக்கம் கெடும். கலைத்துறையினர் சொந்த முயற்சியில் வெற்றி காண்பர்.

**பரிகாரம்: தந்வந்திரி பகவானை வழிபட்டு வாருங்கள்.**

Umadevi Duraisamy, M.A; M.Ed;